31/may/202


# உதயன்

சுடர் : 36 கதிர் : 186 | திங்கட்கிழமை | வைகாசி 16 ஆம் நாள் 31 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | 000 111


## வடக்கில் கொரோனா 111

யாழ்ப்பாணம், மே 31
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு 14

## அரசுக்கு எதிராக தாதியர்கள் இன்று போர்

கொழும்பு, மே 31
கொரோனா பெருந்தொற்றுக்கு எதிரான போரில் முதன்மைப் பணியாற்றிவரும் தாதியர்கள் அரசுக்கு எதிராக இன்று 14

## கொரோனாவால் வவுனியாவில் பெண் இறப்பு!

வவுனியா, மே 31
வவுனியாவில் பெண்ணொருவர் கொரோனாவால் உயிரிழந்தார். வவுனியா - அண்ணா நகரைச் சேர்ந்த 52 வயதுடைய பெண்ணே உயி 14

## யாழ்ப்பாணத்தில் 52% தடுப்பூசி ஏற்றப்பட்டது

யாழ்ப்பாணம், மே 31
யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றைய தினம் அனுமதிக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளுக்கு 14



# தடுப்பூசிக் கொள்வனவில் பெருந்தொகை மோசடி!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு விசாரணை வேண்டுமெனவும் கோரிக்கை

கொழும்பு, மே 31
சீனாவின் சைனோஃபோர்ம் தடுப்பூசிக் கொள்வனவில் அரசு பெரும் மோசடியில் ஈடுபட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார். 15

## அஸ்ராஜெனகா ஏற்றியோருக்கு ஸ்புட்னிக் வி வழங்கத் திட்டம்

கொழும்பு, மே 31
அஸ்ராஜெனகா தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட 6 லட்சம் பேருக்கு இரண்டாவது டோஸ் ஏற்றுவதற்கு அதனைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதால், ஸ்புட்னிக் வி தடுப்பூசியை அவர் 15

## தடுப்பூசி ஏற்றும் சந்தர்ப்பத்தை மக்களே தவறவிடாதீர்கள்

### வடக்கு மாகாண சமுதாய மருத்துவ நிபுணர் இ.கேசவன்



- நீரிழிவு, உயர்குருதி அழுத்தம் உள்ளவர்களும் தடுப்பூசி போடலாம்
- பாலூட்டும் தாய்மாரும் ஏற்ற முடியும்
- சைனோஃபோர்மால் பாதிப்புக்கள் ஏற்படும் இலங்கையில் பதிவாகவில்லை

யாழ்ப்பாணம், மே 31
கொரோனாத் தடுப்பூசி ஏற்றுவதற்கு யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது. சைனோஃபோர்ம் தடுப்பூசி பாதுகாப்பானதும் வினைத்திறனான துமாகும். உலக சுகாதார நிறுவனத்தின் அண்மைய ஆய்வுகளின் அடிப்படையில் திரிபடைந்த வைரஸ்களுக்கு எதிராகவும் இது பாதுகாப்பானது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் 15

## கிளிநொச்சியில் வாள்வெட்டு 10 பேர் மருத்துவமனையில்!

கிளிநொச்சி, மே 31
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற வாள்வெட்டில் 10 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 15

## மூதாட்டி கொலை வழக்கில் ஆறாம் சந்தேக நபர் கைது

### இரு ஆண்டுகளின் பின் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 31
தெல்லிப்பழையில் வீட்டில் தனித்திருந்த மூதாட்டி கொலைசெய்யப்பட்டு, நகை மற்றும் பணம் கொள்ளையிடப்பட்ட 15

## மேலும் 22 பிரிவுகளுக்கு கொரோனாத் தடுப்பூசி!

யாழ்ப்பாணம், மே 31
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தடுப்பூசிகள் வழங்குவதற்கு 61 கிராம அலுவலர் பிரிவுகள் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், மேலும் 22 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு தடுப்பூசி வழங்க அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கை 14



## யாழ். நூலகம் எரிக்கப்பட்டு இன்றுடன் 40 ஆண்டுகள்

யாழ்ப்பாணம், மே 31
யாழ்ப்பாணம் பொதுநூலகம் எரிக்கப்பட்டு இன்றுடன் 40 ஆண்டுகள் நிறைவடைகின்றன. 1981 மே 31 நள்ளிரவு யாழ்ப் 15

### பேரினவாதிகளை எதிர்த்து

## தமிழருக்கு ஆதரவளித்த பௌத்த துறவி மறைவு

### கொரோனாவால் உயிர் பிரிந்தது

கொழும்பு, மே 31
தமிழர்களுக்கு நீதியான, நியாயமான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் எனக் குரல் கொடுத்த லங்கா சமசமாஜக் கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் காலி மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பத்தேகம சமித தேரர் காலமானார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் மாத்தறை தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்றுமுன்தினம் இரவு தனது 69ஆவது வயதில் உயிரிழந்துள்ளார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். 2001ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்த 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனாத் தொற்று: மேலும் 36 பேர் சாவு

கொழும்பு, மே 31

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 36 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,441ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)







# யாழ். மாவட்டத்துக்கான தடுப்பூசி உத்தியோகபூர்வமாக கையளிப்பு

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாண மாவட்டத்துக்கான கொரோனாத் தடுப்பூசி மருந்து வடக்கு மாகாண ஆளுநரால் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் ஆகியோரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.



யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மக்களை கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு அரசால் செயற்படுத்தப்பட்டுள்ள தடுப்பூசி வழங்கும் திட்டத்தின்படி நேற்று அந்தத் தடுப்பூசிகள் கையளிக்கப்பட்டன. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.


50 ஆயிரம் தடுப்பூசிகள் இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர், பிரதமரின் வடக்குக்கான இணைப்பாளர், யாழ். மாவட்டச் செயலர், கடற்தொழில் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பதில் பணிப்பாளர், யாழ் போதனா வைத்தியசாலையின் மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பிரிவினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்படி நேற்றுக் காலை முதல் யாழ்ப்பாண மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவிலும் பொதுமக்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. மாவட்டத்தில் முதற்கட்டமாக அதிக அளவில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட பிரதேசங்களில் 30 வயதுக்கு மேற்பட்டோர் அனைவருக்கும் தடுப்பூசி வழங்குவதற்கான ஏற்பாடுகள் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் முன்னெடுக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-20)

## தடுப்பூசி ஏற்றும் படிமுறை








































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இடைநிலை சிகிச்சை நிலையத்திலிருந்து

# வீட்டுக்கு அழைத்துச்செல்லும்போது இடைநடுவில் இறக்கிவிட வேண்டாம்

**கொடிகாமம், மே 31**

**இடைநிலை சிகிச்சை நிலையத்திலிருந்து வீடுகளுக்கு நோயாளர் காவு வண்டியில் அழைத்துச்செல்லப்படும் நபர்கள், அவர்களுடைய வீடுகளுக்கே கொண்டுசென்று இறக்கப்படுதல் வேண்டும் என்று சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கலைவானி வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

கொரோனாத் தொற்று உள்ளது என்று பி.சி.ஆர் பரிசோதனையில் இனம்காணப்பட்ட ஒருவர் அவசியம் இடைநிலை சிகிச்சை நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட வேண்டும் என்று சுகாதாரப் பகுதியினர் முடிவெடுத்தால்,

அவ்வாறான ஒருவரை அழைத்துச் செல்லும் நோயாளர் காவு வண்டியில் அளவுக்கதிகமான நபர்களை அழைத்துச்செல்லுதல் முற்றாக தவிர்க்கப்படவேண்டும்.

ஆனால் நடைமுறையில் அளவுக்கு அதிகமானவர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர் என பாதிக்கப்பட்டவர்கள் எம்மிடம் கூறியுள்ளனர். எனவே இதனை அந்தந்தப் பகுதியில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஊடாக சுகாதாரப் பிரிவினர் இறுக்கமாக கண்காணிக்க வேண்டும்.

அதுபோல இடைநிலை சிகிச்சை நிலையத்திலிருந்து மீண்டும் வீடுகளுக்கு திரும்பும் நபர்களை ஏற்றிச் செல்கின்ற நோயாளர் காவு வண்டிகள் அவர்களின் வீடுகளில் கொண்டுசென்று இறக்காமல் அவர்களின் கிராமம் அல்லது பிரதேசம் ஆரம்பிக்கும் பிரதான வீதி அல்லது பிரதான சந்தி போன்ற இடங்களில் இறக்கிவிடுகின்றன என பாதிக்கப்பட்டவர்கள் மூலம் அறியமுடிகின்றது. இது ஒரு மனிதாபிமானமற்ற செயற்பாடாகும்.

இதற்கு இடைநிலை சிகிச்சை நிலையத்திலிருந்து வெளியேறும் நோயாளர் காவு வண்டியில் அளவுக்கு அதிகமானவர்கள் ஏற்றுவதைத் தடுப்பதுடன் அந்த வண்டியின் சாரதியிடம் குறித்த நபர் அவரது வீட்டில் கொண்டுசென்று இறக்கப்பட்டுள்ளார் என்பதை உறுதிசெய்யும் ஒரு படிவத்தை வழங்கி அந்த நபரிடம் கையெழுத்து பெறும் நடைமுறையை கொண்டுவர சுகாதாரப் பிரிவினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ப-159)

# முடக்கப்பட்ட கிராமங்களுக்கு நடமாடும் சேவைகளை வழங்குக

### மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, மே 31

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட பரந்தன் வீதியில் மஞ்சள் பாலத்துக்கு அப்பால் உள்ள கிராமங்களின் மக்களுக்கு, நடமாடும் வியாபார சேவைகள், வங்கிச் சேவைகள் போன்றவற்றை அதிகாரிகள் வழங்க வேண்டும் என்று அந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அந்த மக்கள் மேலும் தெரிவிக்கையில்;

கொவிட் தொற்றுக் காரணமாக கடந்த 17ஆம் திகதி முதல் புதுக்குடியிருப்பு பிரதேசம் முடக்கப்பட்டுள்ளது. மக்கள் தங்கள் அத்தியாவசிய தேவையைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இந்த நிலையில் புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் மஞ்சள் பாலத்துக்கு அப்பால் உள்ள தேவிபுரம், வள்ளிபுனம், சுதந்திரபுரம், உடையார்கட்டு, இருட்டுமடு, குரவில் மற்றும் தேராவில் வரையான கிராமங்களில் மக்கள் தங்கள் அன்றாட வாழ்வியலைக் கொண்டுசெல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். அரசின் நிவாரண உதவியோ, அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரண உதவிகளோ கிடைக்காத நிலையில் வாழ்ந்துவருகிறோம்.

முடக்கப்பட்டு 13 நாள்கள் கடந்துவிட்ட நிலையில் பொருள், பணத் தேவை ஏற்பட்டால், அதைப் பெற்றுக்கொள்ள புதுக்குடியிருப்பு - பரந்தன் முதன்மை வீதியூடாகவே செல்லவேண்டிய நிலை உள்ளது. ஆனால் முடக்க நிலையில் பொலிஸார், படையினர் மக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி வருகின்றார்கள். வங்கியில் பணம் எடுப்பதாக இருந்தாலு.ம் நகைகளை அடகுவைப்பதாக இருந்தாலும் 8 கிலோமீற்றர் தூரம் கொண்ட புதுக்குடியிருப்பு நகருக்குத்தான் செல்லவேண்டும். எனவே அரச அதிகாரிகள் மக்களின் நிலையைக் கருத்தில் கொண்டு நடமாடும் வியாபார சேவை, வங்கிச் சேவை என்பவற்றை எமது கிராமங்களுக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றனர். (ப-19)

# காட்டிக்கொடுக்க முல்லையிலும் 'ட்ரோன்' தயார்

முல்லைத்தீவு, மே 31

முல்லைத்தீவு மாவட்டத்தில் பயணத்தடை அமுலில் உள்ள வேளையில், மக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் விமானப்படையினர் ஈடுபட்டுள்ளனர். "ட்ரோன்" கமராவைப் பறக்கவிட்டு நடமாடும் மக்கள் கண்காணிக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முடக்கப்பட்ட பகுதிகளிலேயே இவ்வாறு "ட்ரோன்" கமராவைப் பறக்கவிட்டு மக்கள் நடமாட்டம் கண்காணிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கையில் விமானப்படையினருடன், பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர். புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 9 கிராமங்கள் முடக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் கண்காணிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என்று முல்லைத்தீவு விமானப்படையினர் தெரிவித்தனர். (ப-19)



# 4 சிறுவர்கள் உட்பட 18 பேருக்கு வவுனியாவில் கொவிட் தொற்று

வவுனியா, மே 31

வவுனியாவில் 4 சிறுவர்கள் உட்பட 18 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் மற்றும் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின. அதில், தோணிக்கல் பகுதியில் 2 வயது மற்றும் 9 வயதுச் சிறுவர்கள் உட்பட 4 பேருக்கும், சிறிராமபுரம் பகுதியில் 3 வயது மற்றும் 8 வயது சிறுவர்கள் இருவருக்கும், ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள இஸ்லாமிய கலாசார மண்டபம் முன்பாகவுள்ள பிரபல பலசரக்கு வர்த்தக நிலையம் ஒன்றில் பணிபுரியும் இருவருக்கும், தவசிகுளம் பகுதியில் ஒருவருக்கும், நவகமுக பகுதியில் ஒருவருக்கும், திருவேகம பகுதியில் ஒருவருக்கும், நெடுங்குளம் பகுதியில் ஒருவருக்கும், வவுனியா சிறைச்சாலைக் கைதி ஒருவருக்கும், சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவருக்கும், தெற்கிலுப்பைக்குளம் பகுதியில் ஒருவருக்கும், ஆச்சிபுரம் பகுதியில் ஒருவருக்கும், பெரியகோமரசன்குளம் பகுதியில் ஒருவருக்கும், புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒருவருக்கும் என 18 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ப-18)




# மாவட்டச் செயலகத்துக்கு அறிவித்து உதவிப்பொருள்களை வழங்குக

### முல்லை. மாவட்டச் செயலரும் வலியுறுத்து

முல்லைத்தீவு, மே 31

முல்லைத்தீவு மாவட்டத்தில் தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களுக்கு உணவுப் பொருள்களை வழங்குபவர்கள் மாவட்டச் செயலகத்துக்கு தெரியப்படுத்தவும் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நிவாரணங்களை வழங்க முன் வருபவர்கள் பிரதேச செயலாளர் ஊடாக மாவட்டச் செயலகத்துக்கு தெரியப்படுத்தி நிவாரணப் பொருள்களை ஒரு ஒழுங்கு முறையில் வழங்கலாம். தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்பவர்களுக்குரிய உலர்உணவுக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கமைய முதல் கட்டமாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை வழங்குவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. மிக விரைவில் பொருள்களை மக்களுடைய வீடுகளுக்கு பிரதேச செயலகத்தின் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சில இடங்களில் எங்களுக்குத் தெரியாமல் பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்களுக்குத் தெரியாமல் சிலர் நேரடியாக மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி வருகின்றார்கள். இது நிறுத்தப்பட வேண்டும். ஏனெனில் நாங்கள் ஒரு வழியின் ஊடாக செல்கின்ற போது அதனுடைய இரட்டிப்பு தன்மையைக் குறைத்துக்கொள்ள முடியும். இதனால் மக்களிடையே சில போட்டிகளும் ஏற்பட்டு தனிமைப்படுத்தி இருக்கின்ற பகுதிகளில் உள்ள மக்கள்கூட தனிமைப்படுத்தப்பட்டு இருப்பதை மறந்து நிவாரணம் கொடுக்கிறார்கள் என்பதற்காக ஒன்றுகூடும் தன்மை காணப்படுகிறது.

எனவே யாராக இருந்தாலும் நிவாரணங்களை வழங்குவதாக இருந்தால் ஒரு ஒழுங்கு முறையின் ஊடாக ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் அந்த நிவாரணங்களை வழங்கவேண்டும்- என்றார். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணத்தடையால் பறிபோனது சந்தைப்படுத்தல் வாய்ப்பு!

## தேங்குகின்றது வெற்றிலை



முல்லைத்தீவு, மே 31

**முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட விசுவமடுப் பகுதியில், வெற்றிலைகளை சந்தைப் படுத்த முடியாததால், வெற்றிலைச் செய்கை யாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

பயணத்தடை நடைமுறையில் உள்ளதால், வெளி மாவட்ட வியாபாரிகள் வெற்றிலை கொள்வனவுக்கென வரமுடியாத காரணத்தால், அவற்றைச் சந்தைப்படுத்த முடியாதுள்ளது. அதனால் வருமான இழப்பு ஏற்பட்டுள்ள அதேவேளை, வெற்றிலைகள் அழுகிவருகின்றன என்றும் வெற்றிலைச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். பல நாள்களாக வெற்றிலை வெட்டப்படாமையால், அவை வீணாகிப் போகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, வெற்றிலைகளை சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-113)

# மனைவி மீது கணவன் வாள்வெட்டு தாக்குதல்

## மூங்கிலாற்றில் சம்பவம்

முல்லைத்தீவு, மே 31

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மூங்கிலாற்றுப் பகுதியில் கணவனால் வாள் வெட்டுக்கு இலக்கான நிலையில், மனைவி உள்ளிட்ட இருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

மூங்கிலாற்று பகுதியில் வசித்துவரும் இளம் குடும்பம் ஒன்றின் கணவன், தனது மனைவிமீது சந்தேகம்கொண்டு வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு, மனைவிமீது வாளால் வெட்டி தாக்குதல் நடத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

26 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு வாள்வெட்டுக்கு இலக்கானார். தாக்குதலைத் தடுக்க முற்பட்ட 24 வயதுடைய உறவினர் ஒருவரும் காயமடைந்துள்ளார். காயமடைந்தவர்கள் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்த புதுக்குடியிருப்பு பொலிஸார் கவனைக் கைதுசெய்துள்ளனர். (ப-19)

# சினைப் பசு கடத்தப்பட்டு இறைச்சியாக்கப்பட்டது

## புங்குடுதீவில் மூவர் கைது



யாழ்ப்பாணம், மே 31

புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தில் வாழ்ந்து வருகின்ற சண்முகம் என்பவருக்குச் சொந்தமான சினைப்பசுவொன்று இறைச்சிக்காக வெட்டிக்கொல்லப்பட்டுள்ளது. மற்றொரு பசு உயிருடன் மீட்கப்பட்டது. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சினைப் பசு வெட்டிக்கொல்லப்பட்டுள்ளமை தொடர்பில், வேலணை பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலனுக்கு மக்கள் முறையிட்டுள்ளனர். அவர், குறிகாட்டுவான் பொலிஸாருக்கும் தகவல் வழங்கி சம்பவ இடத்துக்குச் சென்றார். அங்கு பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். அதன்போதே அங்கு உயிருடனும் ஒரு பசு நின்றதைக் கண்டு மீட்டனர். அது கொல்லப்பட்ட சினைப் பசுவின் உரிமையாளரின் சகோதரனுடைய பசு என்பது தெரியவந்தது. விசாரணையின் பின்னர் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைதுசெய்து விசாரணை மேற்கொண்டனர். அவரது வீட்டிலிருந்து நூற்றுக்கணக்கான கிராம் அளவுடைய கேரளக் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் கூறுகின்றனர். அவரிடம் நடத்திய மேலதிக விசாரணையின் பின்னர், பசுவின் இறைச்சியை விற்பனைசெய்வதற்கு உதவினர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த)

# அதிக விலையில் எரிவாயு; பாவனையாளர்கள் விசனம்

கொடிகாமம், மே 31

சமையல் எரிவாயுவின் அளவு குறைந்து வருவதால் அதிக விலை கொடுத்து வாங்கும் நிலை ஏற்படுகிறது என பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோ எரிவாயு 128 ரூபா வீதம் 12.5 கிலோ நிறையுடைய எரிவாயு சிலிண்டர் ஆயிரத்து 600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது சிலிண்டருக்குள் 9.2, 9.6, 9.8, என்ற நிறைகளில் எரிவாயு நிரப்பப்பட்டு அதே விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. அதே வேளை எடை குறைந்த நீல நிற எரிவாயுவும் ஆயிரத்து 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. அண்மைக்காலமாக எரிவாயு தட்டுப்பாட்டால், கிடைத்தால்போதும் என்ற நிலையில் மக்கள் அதனை வாங்கிச்செல்கின்றனர். எரிவாயு குறைவாக இருப்பதால் குறைந்த நாள்களே பாவிக்க முடிகிறது எனவும், வழங்கப்படும் குறைந்தளவு எரிவாயுவுக்கு ஆரம்பத்தில் கொடுத்த விலையைக் கொடுத்தே வாங்கும் நிலை ஏற்படுகிறது எனவும் பாவனையாளர்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை தற்போது கொரோனாத் தொற்று அதிகரித்து பயணத்தடை அமுலில் உள்ள காரணத்தால் தாம் தொழில்களை இழந்து வருமானமற்று இருக்கும் நிலையில் அதிக விலை கொடுத்து சமையல் எரிவாயுவைப் பெற வேண்டியுள்ளது எனவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பாவனையாளர்கள் தெரிவித்தனர். (ப-159, 9)



# மன்னாரிலும் 'ட்ரோன்'மூலம் ஆரம்பமானது கைது வேட்டை

மன்னார், மே 31

மன்னாரில் கொரோனா பெருந்தொற்றின் மூன்றாவது அலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விதிக்கப்பட்ட பயணத் தடையை மீறுவோர் "ட்ரோன்" கமரா மூலம் அவதானிக்கப்பட்டு கைதுசெய்யப்படுகின்றார்கள். இவ்வாறு நேற்று மட்டும் 15 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் விமானப்படை மற்றும் பொலிஸார் இணைந்து நேற்றுக் காலை 10 மணியிலிருந்து மன்னார் புதிய பஸ் நிலையத்தில் "ட்ரோன்" கமராவை பறக்கவிட்டு நிலைமைகளை அவதானித்து வருகின்றார்கள். இந்த நடவடிக்கையின் மூலம் மன்னார் நகரசபை மைதானத்துக்கு உட்பட்ட பகுதிகளும், மன்னார் பனங்கட்டிகொட்டுப் பகுதிகளும் அவதானிக்கப்பட்டு பயணத் தடையை மீறிய 15 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-56.213)

## வடமராட்சியில் தொற்று அதிகரிப்பு;

# போதிய அம்புலன்ஸ் வசதிகள் இன்றி திண்டாடுகின்றது பரு.மருத்துவமனை

வடமாராட்சி, மே 31

வடமராட்சியில் கொரோனாத் தொற்றாளர்களது எண்ணிக்கை அச்சமூட்டும் வகையில் அதிகரித்து வருகின்ற நிலையில், தொற்றாளர்களை இடைநிலை சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்ல போதிய அம்புலன்ஸ் வசதிகளின்றி பருத்தித்துறை ஆதார மருத்துவமனை சிரமத்தில் உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறை மருத்துவமனைகளில் மட்டுப்படுத்தப்பட்ட அம்புலன்ஸ் வண்டிகளே பயன்பாட்டிலுள்ளன.

இந்த நிலையில் கடந்த 17ஆம் திகதி நெல்லியடியில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் வண்டியொன்று வீதியில் நிறுத்தப்பட்ட மற்றொரு வாகனத்துடன் மோதி சிறு விபத்துக்குள்ளாகியிருந்தது. விபத்துக்குள் ளான அம்புலன்ஸ் வண்டி நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது. சிறிய அளவிலான திருத்தங்களுடன் மீண்டும் சேவையிலீடுபடுத்தக் கூடிய வாகனமென்ற வகையில், அதனை விடுவிக்க நெல்லியடி பொலிஸார் முன்வந்தபோதும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை நிர்வாகமோ வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களமோ அக்கறையற்றுள்ளது என்று தெரியவருகின்றது. திருத்த வேலைக்கான அனுமதியை வடமாகாண பிரதம செயலாளர் அலுவலகம் தரவில்லையென சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்து வருகின்றது.

இந்த நிலையில் கொரோனா பெருந்தொற்று சூழலில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை போதிய அம்புலன்ஸ் இன்றி நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது என்று நோயாளிகளுக்கு தெரிவிக்கப்பட்டு வருகிறது. (ப-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## முன்னை இட்ட தீ

'நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்.
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.
இரவில் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
'எங்கள் பட்டியலில் இவர்பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?'
என்று சினந்தனர்.
'இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஓர் ஈயினைக் கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்
ஆகையினால்......
என்றனர் அவர்கள்.
'சரி சரி
உடனே மறையுங்கள் பிணத்தை'
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.
சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
சிகாலோவாத சூத்திரத்தினைக்
கொளுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும்தான் சாம்பரானது .'

யாழ்ப்பாண நூலகம் பேரினவாதப் பிசாசுகளால் 1981 மே 31 நள்ளிரவு தீயில் பொசுங்கிய பின்னரான துயர் படிந்த காலத்தை கவிஞர் எம்.ஏ.நுஃமான் இப்படி பதிவு செய்திருந்தார். முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு சற்றும் குறையாத வேதனையும், வலியும், ஆறாத ரணமும் தந்த அந்தத் துர்நிகழ்வு நடந்து முடிந்து இன்றோடு 40 வருடங்கள்.


யாழ். நூலகம் என்பது அப்போது வெறும் கட்டடமாக மக்களிடம் நிலைபெற்றிருக்கவில்லை. யாழ்ப்பாணத்து மக்களின் ஆன்மாவாக அது அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. தங்கள் பிள்ளைகளின் அறிவுப்புலமாக விளங்கிய யாழ். நூலகத்துக்கு நன்றி செலுத்தும் வகையில் பல குடும்பங்கள், நூலக முன்புறத்தில் இருந்த சரஸ்வதி சிலைக்கு பொங்கலிட்டு படையல் செய்த சம்பவங்களும் நிகழ்ந்திருந்தன.

ஒரு இனத்தை அழிக்க வேண்டுமாயின் முதலில் அந்த இனத்தின் அறிவை அழிக்க வேண்டும். எனவே தமிழர்களின் அறிவுக்கருவூலமாக 1800ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகள், வரலாற்றுச் சான்றுகள் உள்ளிட்ட 97 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விலை மதிக்க முடியாத நூல்களோடு, தெற்காசியாவில் சிறந்த நூலகமாக விளங்கிய யாழ்.பொது நூலகத்தை எரிப்பதனூடாக தமிழர்களின் ஆன்மாவை நிலைகுலைய வைக்கலாம் என பேரினவாதிகள் கருதினர். அதனால் அவர்களின் கண்ணை உறுத்திக் கொண்டிருந்த நூலகத்துக்குப் பேரின வானரங்கள் மே 31 நள்ளிரவு தீயிட்டன. ஜூன் 2ஆம் திகதிவரை நூலகம், மக்களின் கண்முன்னே எரிந்து சாம்பரானது . அதைத் தாங்கமுடியாமல் தாவீது அடிகளார் உயிர் பிரிந்தார். இத்தோடு தமிழர்களின் கொட்டத்தை அடக்கிவிட்டதாக பேரின வானரங்கள் இறுமாப்பு அடைந்தன.

ஆனால் அவர்கள் எதிர்பார்த்தமைக்கு மாறாக, நூலகத்தில் எரிந்த தீ, தமிழர்களின் மனங்களுக்குள் புகுந்து அணையாமல் எரியத் தொடங்கிற்று. இந்தத் தீயின் வெம்மை உரிமைக்காக ஆயுதமேந்த இன்னுமின்னுமாக இளைஞர், யுவதிகள் அணிவகுக்க வைத்ததே தவிர அடிபணிய வைக்கவில்லை. நூலக எரிப்பை முன்னிறு நடத்தியவராகச் சொல்லப்பட்ட லலித் அத்துலத்முதலி, பின்னொரு நாளில் வெடிகுண்டுக்கு இரையானார்.

மீண்டும் புதிதாக யாழ்.பொது நூலகம் அமைக்கப்பட்டபோதும் கூட, அதன் முன்னைய ஆன்மா இன்னும் அதனிடத்தே இல்லையென்றுதான் சொல்லவேண்டும். அழிந்த நூலகம் அழிந்ததுதான். அது வேறு ஆன்மா, இப்போதைய நூலகத்தின் ஆன்மா வேறு. ஏனெனில் வெறும் கட்டடம் தான் அதேபோன்று முன்னரை விடவும் கூடுதல் வசதிகளோடு அமைக்கப்பட்டதே தவிர அதனோடு எரிந்து போன அரிய நூல்களோ, சுவடிகளோ மீண்டெழ முடியாதே?. அவை இல்லாமல் எப்படி நூலகத்தின் ஆன்மா திரும்ப முடியும்?

எனவே முள்ளிவாய்க்கலைப் போல நூலக எரிப்பும் தமிழர்கள் அனைவரும் நினைவேந்த வேண்டிய முக்கியமான நாளே. வழமை போல தம்முடைய இனவாதத்தின் கோரமுகத்தை அம்பலப்படுத்தும் நிகழ்வென்பதால், நூலக எரிப்பு நினைவேந்தலையும் இந்த அரசாங்கம் தடுக்கவே செய்யும். தற்போது அமுலில் இருக்கும் பயணத்தடையும், கொரோனாக் கால நடைமுறைகளும் இந்த தடுத்தலுக்கு இன்னும் வசதியாகப் போய்விட்டன. இருப்பினும் நெஞ்சினில் நெருப்பேந்தி நினைவில் எரிவோம்.




# அனுமதிபெறாது விற்பனை: இரு கடைகள் மூடப்பட்டன

### நடமாடும் சேவைக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமும் ரத்துச்செய்யப்பட்டது

**வவுனியா, மே 31**

**வவுனியாவில் அனுமதியின்றி திறக்கப்பட்ட இரு வர்த்தக நிலையங்கள் பொலிஸாரால் நேற்று இழுத்து மூடப்பட்டன.**

வவுனியா சந்தை உள்வட்ட வீதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பயணக் கட்டுப்பாட்டு நேரத்தில் வர்த்தக நிலையத்தை திறந்து வியாபாரம் நடைபெற்றுள்ளது. இங்கு பொதுமக்கள் பொருள்களைப் பெற்றுச் செல்கின்றமை தொடர்பில் வவுனியா பிரதேச செயலருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து பிரதேச செயலகத்தினர் அங்கு சென்று பார்வையிட்டனர். இதன்போது அனுமதி பெறாது வியாபாரம் செய்தமை தெரியவந்தது.

அத்துடன் மன்னார் வீதி, வேப்பங்குளம் பகுதியில் உள்ள 'சுப்பர் மார்க்கெட்' நிலையத்தினர் பயணக்கட்டுப்பாட்டு நேரத்தில் வீடு வீடாக சென்று பொருள்களை வழங்குவதற்கான அனுமதியைப் பெற்றிருந்தனர். ஆனால், அவர்கள் வர்த்தக நிலையத்தை திறந்து வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர் என்று முறைப்பாடு கிடைத்தது. அதனை அடுத்து இரு கடைகளும் மூடப்பட்டன.

அதுமட்டுமன்றி, பயணக் கட்டுப்பாட்டு நேரத்தில் வீடுகளுக்கு சென்று பொருள்களை வழங்குவதற்காக பிரதேச செயலகத்தால் ஒரு கடைக்கு வழங்கப்பட்ட அனுமதியும் மீளப்பெறப்பட்டுள்ளது.

(த-18)

# நடமாடும் சேவைகள் கிடைக்கின்றனவா? சகல பகுதிகளிலும் உறுதிப்படுத்துங்கள்

### மன்னார் மாவட்டச் செயலர் அறிவுறுத்து

பயணக் கட்டுப்பாடு காரணமாக கிரா மங்கள்தோறும் அத்தியாவசிய பொருள்கள் நடமாடும் சேவைகள் மூலமாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. எனினும், குறித்த சேவைகள் அனைத்து கிராமங்களுக்கும் சென்றடைகின்றனவா என்பது தொடர்பில் கலந்துரையாடிய மன்னார் மாவட்டச் செயலர், சேவைகள் அனைவருக்கும் சென்றடைகின்றனவா என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மன்னார் மாவட்டத்தில் கொரோனா மற்றும் மக்களின் அத்தியாவசிய தேவைகள் தொடர்பான கலந்துரையாடல், மன்னார் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்றது. அதன்போதே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் எந்தந்த கிராமங்களுக்கு இந்தச் சேவைகள் சென்றடைவதில்லை என்ற விடயம் கவனத்துக்கு கொண்டுவரும் பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் நடமாடும் அத்தியாவசிய பொருள்களைக் கொண்டுசெல்வோருக்கு 'பாஸ்' வழங்கும்போது எந்தெந்தக் கிராமங்களை உள்ளடக்கி அவர்களின் நடமாடும் சேவை இடம் பெறுகின்றது என்பதையும் கவனத்தில் எடுக்கும்போது விடுபடும் பகுதிகள் தெரியவரும் என்றும் சக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

(த-60)

# தரம் ஒன்று மாணவர் அனுமதி; படிவம் வெளியீடு

கொழும்பு, மே 31

அரச பாடசாலைகளில் 2022ஆம் ஆண்டில் முதலாம் வகுப்பில் மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பப் படிவம், வெளியிடப்பட்டுள்ளது கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மாதிரி விண்ணப்பப் படிவம், www.moe.gov.lk என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள மாதிரிப் படிவம் மற்றும் அறிவுறுத்தல்களின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து, சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபருக்கு, பதிவு தபால் ஊடாக எதிர்வரும் ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென கல்வி அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

(ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபோகத்துக்கு உரம் இன்மையால் கிளி.யில் 30 வீத விவசாயிகள் பாதிப்பு

கிளிநொச்சி, மே 31

கிளிநொச்சியில் தற்போது சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள பல விவசாயிகளுக்கு உரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில், 30 வீதமான விவசாயிகளுக்கு இதுவரை சிறுபோக விதைப்புக்கான உரம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டு, 40 நாள்கள் கடந்த நிலையிலும் உரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாததால் பயிர் அழிவுகளைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டம் ஒரு விவசாய மாவட்டமாக இருக்கும் நிலையிலும் உரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது இருப்பது விவசாயிகள் மத்தியில் விசனங்களை உருவாக்கி உள்ளது. இரணைமடு உட்பட அனைத்து நீர்ப்பாசனக் குளங்களின் கீழும் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு இவ்வாறு உரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

கமநல சேவை நிலையங்கள் பொலிஸாரின் உதவியுடன், விவசாயிகளுக்கு உரங்களை விநியோகிக்கலாம் என்று கொழும்பில் இருந்து கமநல சேவைகள் ஆணையாளர் நாயகத்தால் சகல கமநல சேவை நிலையங்களுக்கும் அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ள நிலையிலும், இதுவரை உரங்கள் கிடைக்கப் பெறவில்லை என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை தனியார் வர்த்தகர்கள் உரங்களை கூடுதலான விலையில் விற்பதும், உரங்களைப் பதுக்கிவைப்பதும் தொடர்ந்த வண்ணமே உள்ளது என்றும் விவசாயிகளால் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது. (ப-13)



## 58 லீற்றர் கசிப்புடன் மூவர் கைது

கிளிநொச்சி, மே 31

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாயனூர் பகுதி அழகாபுரி மற்றும் கல்லாறு ஆகிய கிராமங்களில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று பேர் பொலிஸாரல் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தற்போது நாட்டில் பயணத்தடை அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், வீதிச் சோதனையில் ஈடுபட்ட பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய குறித்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 58 லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் தருமபுரப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு, விசாரணைகள் இடம்பெற்ற பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப)



## தண்ணீர்த் தாங்கிகள் முல்லையில் கையளிப்பு

வலி.தென்மேற்கு, மே 31

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தால், முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு ஒரு தொகுதி தண்ணீர் தாங்கிகள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கையளிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதனின் கோரிக்கைக்கு அமைவாக மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் மன்னார் மாவட்ட பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்குச் சென்று, ஆயிரம் லீற்றர் கொள்வனவு கொண்ட 25 தண்ணீர்த் தாங்கிகளை முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதனிடம் கையளித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தாக்கத்தின் மூன்றாவது அலை காரணமாக அமைக்கப்பட்டுள்ள இடைநிலை சிகிச்சை நிலையங்களில்னானானா குடிதண்ணீர் தட்டுப்பாடுகளை நிவர்த்திசெய்வதற்காக குறித்த தண்ணீர் தாங்கிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ப-115)

## பயணத்தடை மற்றும் கடுங்காற்றால் வாழைச் செய்கையாளர்கள் பாதிப்பு



கிளிநொச்சி, மே 31

அண்மையில் ஏற்ப்பட்ட கடும் காற்றுக் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் உள்ள வாழைத்தோட்டச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பயணத் தடைகாரணமாக வெளிமாவட்ட வியாபாரிகள், கொள்வனவுக்கு வரமுடியாத காரணத்தால், கிளிநொச்சியைச் சேர்ந்த வாழைத்தோட்டச் செய்கையாளர், தமது தோட்டங்களில் உற்பத்திசெய்யப்பட்ட வாழைக்குலைகளை விற்பனை செய்ய முடியாது பாதிக்கப்பட்டதால் வாழைக்குலைகள் அறுவடைசெய்யப்படாது வாழை மரங்களிலேயே விடப்பட்டிருந்தன. இந்த நிலையில், அண்மையில் வீசிய கடும் காற்றுக் காரணமாக வாழை மரங்கள் குலையுடன் முறிந்து வீழ்ந்துள்ளன. இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். எமது வாழ்வாதாரத்தை ஈடு செய்வதற்கு சம்பந்தப் பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றனர். (ப-13)



## அக்கராயனில் கைக்குண்டு மீட்பு

கிளிநொச்சி, மே 31

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குப்பட்ட தனியார் காணி ஒன்றில் வெடிக்காத நிலையில் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த காணியைத் துப்பரவுசெய்யும் பணியில் ஈடுபட்டபோதே வெடிக்காத நிலையில் இருந்த குண்டு இனங்காணப்பட்டது. இது தொடர்பில் அக்கராயன் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய, நீதிமன்ற அனுமதியுடன் சிறப்பு அதிரடிப்படையினரின் உதவியுடன் குறித்த குண்டை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர். (ப-316)

## பயணத்தடையிலும் கஞ்சா; மாணிக்கபுரத்தில் மூவர் கைது

முல்லைத்தீவு, மே 31

முல்லைத்தீவு-விசுவமடு பகுதி மாணிக்கபுரத்தில் மூன்று பேர் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மாணிக்கபுரம் கிராமத்தில் கஞ்சா பாவனை இடம்பெறுகின்றது என்று புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நேற்றுமுன்தினம் குறித்த பகுதியில் பொலிஸார் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர். இதன்போது, கஞ்சாவை நுகர்ந்துகொண்டிருந்த குற்றச்சாட்டில், மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 250 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

நாட்டில் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் அன்றாட உணவைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவரும் நிலையிலும் கிராமங்களில் கஞ்சா, கசிப்பு பாவனைகள் இடம்பெற்று வருகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-19)

## தண்டவாளத்தைக் கடப்பதற்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் வேண்டும்

### இந்திராபுரம் மக்கள் மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை

கிளிநொச்சி, மே 31

ரயில் கடவை ஊடாக தண்டவாளத்தைக் கடந்து கிராமத்துக்குள் செல்வதற்கு, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை ஏற்படுத்த மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிளிநொச்சி பச்சிலைப் பள்ளியின் இந்திராபுரம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இந்திராபுரம் கிராமத்தில் தற்போது மக்கள் மீளக் குடியமர்ந்து வருகின்றனர். இந்தக் கிராமத்துக்கான வீதி தண்டவாளத்தைக் கடந்தே செல்கின்றது. வாகனங்கள் செல்லக் கூடிய வகையில் தண்டவாளத்தின் அருகில் கட்டுமானங்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும், அக் கட்டுமானங்கள் தற்காலிகமாகவே உள்ளன. எனவே ரயில் கடவைப் பகுதியில் வாகனங்கள் கடந்து செல்லவும், மக்கள் பாதுகாப்பாக வீதியைக் கடப்பதற்கும் சமிஞ்ஞை விளக்குகளை அமைக்க வேண்டும்.

இதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் கிராம மக்கள் அந்தக் கடவை ஊடாக பாதுகாப்பாகச் செல்லும் வகையில் கடவையில் பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும். இவ்விடயம் தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளரிடமும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. எனவே அவர்கள் விரைந்து நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் - என்றனர். (ப-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரே நாளில் 42ஆக பதிவான கொரோனா உயிரிழப்புக்கள்



கொழும்பு,மே 31

இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 405 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினமும் 42 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை கடந்த ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதிக்குப் பின்னர், புத்தாண்டுக் கொத்தணியால் மாத்திரம் 793 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை கொரோனா இரண்டாவது அலை ஆரம்பித்த கடந்த ஆண்டு ஒக்ரோபர் 4 ஆம் திகதியிலிருந்து நேற்றுமுன்தினம் வரை ஆயிரத்து 392 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில், 9 வயதுக்கு உட்பட்டோர் 2 பேரும், 10 வயதுக்கும் 30 வயதுக்கும் உட்பட்டோர் 16 பேரும், 31 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டோர் 39 பேரும், 41 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டோர் 99 பேரும், 51 வயதுக்கும் 60 வயதுக்கும் உட்பட்டோர் 206 பேரும், 61 வயதுக்கும் 70 வயதுக்கும் இடைப்பட்டோர் 367 பேரும், 71 வயதுக்கு மேற்பட்டோர் 663 பேரும் உள்ளடங்குகின்றனர். (எ,ஓ,4,5)



## அபாயமான பகுதிகள் வரைபடம் வெளியீடு

கொழும்பு,மே 31

இலங்கையில் கொரோனாத் தொற்றுப் பரவும் அபாயமான பகுதிகள் தொடர்பான வரைபடம் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவால் வெளியிட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக்களின் எண்ணிக்கை, இடைநிலை சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டோரின் எண்ணிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதியுடன் முடிவடைந்த 14 நாள்களில் அறிக்கையிடப்பட்ட விவரங்களைக் கொண்டு குறித்த வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## மஜ்மா நகர் மையவாடியில் 322 சடலங்கள் நல்லடக்கம்

கொழும்பு,மே 31

ஓ ட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சூடுபத்தினசேனை (மஜ்மா நகர்) மையவாடியில், கடந்த சனிக்கிழமை வரை, கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின், 322 சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன என்று ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக 298 முஸ்லிம் ஜனாஸாக்களும், 11 இந்துக்களின் சடலங்களும், 8 கிறிஸ்தவர்களின் சடலங்களும், 3 பௌத்தர்களின் சடலங்களும், 2 வெளிநாட்டவர்களின் சடலங்களும் அடக்கம்செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## மூன்றாம் அலையில் பெண்கள் அதிகம் சாவு



கொழும்பு,மே 31

நாட்டில் பரவி வரும் கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலையில், பெண்களின் இறப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொரோனாத் தொற்றின் முதல் அலையால் ஆண்களே அதிகம் பாதிக்கப்பட்டனர். எனினும் தற்போது பெண்களிடையே இறப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இவ்வாறு தொற்றால் இறக்கும் பல பெண்களுக்கு நீரிழிவு நோய் மற்றும் இதய நோய் உள்ளிட்ட தொற்றுநோயற்ற நோய்கள் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை எவ்வித தொற்றா நோய்கள் இல்லாதவர்களும் உயிரிழந்துள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## நடமாடும் சேவையில் பொருள்கள் விற்பனை

கொழும்பு,மே 31

நாட்டில் நடைமுறையிலுள்ள பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக, நடமாடும் வாகனங்கள் ஊடாக அத்தியாவசியப் பொருள்களை, அனைத்து பிரதேசங்களிலும் விற்பனைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 7 ஆம் திகதி வரை பயணக் கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருப்பதால், மக்களின் தேவை கருதி, பொருளாதார மத்திய நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

அங்கிருந்து பெற்றுக்கொள்ளப்படும் பொருள்களை, வியாபாரிகள் நடமாடும் வாகனங்கள் மூலம் விற்பனைசெய்ய முடியும். அதற்கான அனுமதி தனியார் துறையினருக்கும் வழங்கப்பட்டுள்ளது. அனுமதிப் பத்திரங்களை வழங்குவது பிரதேச செயலாளர்களின் பொறுப்பாகும்.

மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் வியாபாரிகள் விற்பனையில் ஈடுபட முடியும்-என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## மேல் மாகாணத்தில் 341 பொலிஸாருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு,மே 31

மேல் மாகாணத்தில் மட்டும், பொலிஸ் உத்தியோகத்தர்கள் 341 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இவர்களின் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## காலி மாவட்டத்தில் அதிக இறப்புக்கள்


கொழும்பு, மே 31

கொரோனாத் தொற்றின் மூன்றாம் அலையில், மேல் மாகாணத்துக்கு வெளியே கொரோனாத் தொற்றால் அதிக உயிரிழப்புக்கள் காலி மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளன.

கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலை கடந்த ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி ஆரம்பித்த பின்னர், 706 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தனர். கொழும்பு மாவட்டத்தில் 108 பேரும், களுத்துறையில் 107 பேரும், கம்பஹாவில் 71 பேரும் உயிரிழந்தனர்.

எனினும் மேல் மாகாணத்துக்கு வெளியே அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் காலி மாவட்டத்தில் பதிவாகியுள்ளன. அந்த மாவட்டத்தில் 87 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## தொடர்மாடி குடியிருப்பில் 102 பேருக்குக் கொரோனா



களுத்துறை வடக்கில் உள்ள தொடர்மாடிக் குடியிருப்பு ஒன்றில் 102 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த தொடர்மாடிக் குடியிருப்பைச் சேர்ந்த 170 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் விரைவான அன்டிஜென் பரிசோதனைகளில், 102 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றாளர்கள் அனைவரும் நடுத்தர வயதுடையவர்கள்.

இதனையடுத்து குறித்த குடியிருப்பு மூடப்பட்டுள்ளது. பாதிக்கப்பாடாதோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் புனானை இடைநிலை சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ - 4)

## கைதானோர் எண்ணிக்கை நேற்றுமுன்தினம் அதிஉச்சம்

கொழும்பு,மே 31

கொரோனாத் தொற்றுக் காலத்தில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில், நேற்றுமுன்தினமும் 914 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்ட திட்டங்களை மீறியமை, முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில் நேற்று முன்தினமே அதிகளவானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் அதிகமானவர்கள் மாத்தளைப் பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதற்கமைய மாத்தளையில் 171 பேரும் நிக்கவரெட்டியவில் 116 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை இதுவரை 17 ஆயிரத்து 300 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விசேட தேவையுடையோருக்கும் கொரோனாத் தடுப்பூசி செலுத்துக

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

**கொழும்பு,மே 31**

**நாட்டிலுள்ள விசேட தேவையுடையவர்களுக்கும் கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசி செலுத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;
கொரோனாத் தொற்றுக் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள மற்றும் அநீதி இழைக்கப்பட்டுள்ள குழுவினராக விசேட தேவையுடையவர்களைக் குறிப்பிடலாம்.
இந்த நிலையில் கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசிப் பட்டியலிலும் இவர்கள் சேர்க்கப்படவில்லை. இந்தக் காலப்பகுதியில் அவர்கள் வாழ்வாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்றார். (எ-4)

# தடுப்பூசி விவகாரத்தில் உழைக்கும் மக்களை புறக்கணிக்கிறது அரசு

## உழைக்கும் மக்கள் சக்தி அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு,மே 31
கொரோனாத் தொற்றுப் பரவலின்போது, பல்வேறு துறைகளில் உழைக்கும் மக்களுக்கு முன்னுரிமை கொடுக்காமல், பல்வேறு அரசியல் தொடர்புகளுக்கு அமைவாகவே, தடுப்பூசித் திட்டத்தை முன்னெடுத்துள்ளது அரசு.
இவ்வாறு உழைக்கும் மக்கள் சக்தி அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.
இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் கடமைகளில் ஈடுபட்டுள்ள மற்றும் அத்தியாவசிய சேவைகளில் ஏற்கனவே ஈடுபட்டுள்ள ஏராளமான வங்கி ஊழியர்கள், அரச ஊழியர்கள், சமுர்த்தி அதிகாரிகள், பெருந்துத் தொழிலாளர்கள், ரயில்வே தொழிலாளர்கள், துறைமுக மற்றும் தபால் ஊழியர்கள் ஆகியோர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இந்த சூழ்நிலையில், அவர்கள் தமக்கு தடுப்பூசி செலுத்த வேண்டும் என்று கோரி, பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றனர்.
அவர்களின் மனிதாபிமான கோரிக்கை தொடர்பில் அவதானம் செலுத்தி, தடுப்பூசித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்குப் பதிலாக, அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பொன்றை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.
அதில் பல்வேறு மட்ட தொழில் துறைகள் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.
இந்தச் சேவைகளில் பணிபுரிவோர் பொதுமக்கள் மற்றும் பல்வேறு தரப்புடன் நேரடியாகத் தொடர்புகொள்கின்றனர். அவர்கள் கொரோனாத் தொற்றின் நேரடி ஆபத்தில் உள்ளனர்.
எனவே குறித்த சேவைகளில் ஈடுபடுவோருக்கு முன்னுரிமை அளித்து, அவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை விரைவுபடுத்துவதற்கான திட்டத்தைச் செயற்படுத்தவும்.
தொழில்முறை நடவடிக்கைகளை அடக்குவதற்குப் பயன்படுத்தப்படும் அத்தியாவசிய சேவை உத்தரவுகளை உடனடியாக அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (எ-4)

# தடுப்பூசியேற்றலில் அரசியல் தலையீடு

## சுமங்கல தேரர் அரசை சாடுகிறார்

கொழும்பு,மே 31
கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் விவகாரத்தில் அரசு படுதோல்வியடைந்துள்ளது என்று ஊழல் ஒழிப்பு தேசிய முன்னணியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் உலப்பனே சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் உள்ள ஊழல் ஒழிப்பு தேசிய முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
அரசின் பொறுப்பற்ற செயற்பாட்டால், மக்களே இன்று சுகாதார ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.
தடுப்பூசி செலுத்தும் விவகாரத்தில் அரசியல்வாதிகளின் தலையீடு காணப்படுகின்றமை உண்மையே. அரசியல்வாதிகளின் கண்காணிப்புக்கு அமையவே தடுப்பூசி பெரும்பாலான பகுதிகளில் செலுத்தப்பட்டுள்ளது. அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் அவர்களுக்குப் பொறுப்பாகவுள்ள துறைகளில் உள்ளவர்களுக்குத் தேவையான அளவு தடுப்பூசிகளை ஒதுக்கீடு செய்துள்ளனர்.
சுகதாரத் தரப்பினருக்கும், பாதுகாப்புத் தரப்பினருக்கும், வயது முதிர்ந்தோருக்கும், பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் தடுப்பூசி இதுவரையில் முழுமையாக செலுத்தப்படவில்லை.
அனைத்து செயற்பாடுகளிலும் அரசியல் தலையீடு காணப்படுவதைப் போன்று தடுப்பூசி விவகாரத்திலும் அரசியல் தலையீடு முழுமையாகக் காணப்படுகின்றது - என்றார். (எ-4)



# தடுப்பூசி ஏற்றப்படுவதை கண்காணித்தார் மஹிந்த

கொழும்பு, மே 31
மாத்தறை மாவட்ட மக்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்று நேரடியாகக் கண்காணித்தார்.
அதற்கமைய மாத்தறை வெல்லமடம மஹிந்த ராஜபக்ச கல்லூரியில் நிறுவப்பட்டுள்ள தடுப்பூசி செலுத்தல் மையத்துக்கு, பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான குழுவினர் சென்றிருந்தனர்.
"மக்களுக்கு தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை தொடர்ச்சியாக செயற்படுத்துங்கள். இதனால் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடாது" என்று அதிகாரிகளுக்கு பிரதமர் அறிவுறுத்தினார்.
அரச அதிகாரிகள், உள்ளூராட்சி நிறுவனங்களின் துப்புரவுத் தொழிலாளர்கள், சுகாதார சேவை அல்லாத அத்தியாவசிய சேவை அதிகாரிகள் உள்ளிட்ட பலருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது. (எ-4)

# தடுப்பூசி விவகாரத்தில் அரசுக்கு வெட்கக்கேடு

## நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

அஸ்ராஜெனெகா தடுப்பூசி நிறுவனத்தின் பதிலால், இலங்கை அரசு வெட்கப்பட வேண்டும். இத்தனை நெருக்கடிக்குள்ளும் சகபாடிகள் உள்ள தனியார் துறையை மையப்படுத்தி அரசு செயற்பட முனைவதானது மிக மோசமான செயற்பாடாகும். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கை அரசு தனியார் துறைக்கு தடுப்பூசியை வழங்குமாறு குறித்த நிறுவனத்துக்குப் பரிந்துரைத்துள்ளது. ஆனால் குறித்த நிறுவனம் இலங்கை அரசுக்கு உரிய பதிலடியை வழங்கியுள்ளது.
அரசுக்கும், உலக சுகாதார நிறுவனங்களுக்கும் மட்டுமே தடுப்பூசி விநியோகிக்கப்படும் என்று அந்த நிறுவனம் கடிதம் மூலம், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்கு அறிவித்துள்ளது. இதனால் அரசுக்கு ஏமாற்றம் - என்றார். (எ-4)

# வாகனக் கொள்வனவுக்கான பணத்தை கொரோனா ஒழிப்புக்கு பயன்படுத்துக

## அரசை வலியுறுத்தினார் கோவிந்தன் கருணாகரம் எம்.பி

மட்டக்களப்பு, மே 31
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகனக் கொள்வனவுக்கு செலவுசெய்யும் பணத்தை, கொவிட் தொற்றை இல்லாமல் ஒழிப்பதற்கான உபகரணங்களைக் கொள்வனவுசெய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
மிகவும் கவலைக்கிடமானதும், துரதிஸ்டவசமானதுமான நிலையில் இலங்கை மாறிக்கொண்டு வருகின்றது. கொரோனாவின் வேகம் நகர்ப்புறங்களில் இருந்து கிராமங்கள் வரை இன்று பரவியிருக்கின்றது. இந்த நிலையில் கொரோனாவைத் தடுப்பதற்காகவும், நிறுத்துவதற்காகவும் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மக்களுக்கோ, மக்கள் பிரதிநிதிகளுக்கோ விரும்பத்தக்கதோ அல்லது ஒரு தீர்வைக் கொடுக்கக்கூடியதாகவோ இல்லை என்றே கூற வேண்டும். தற்போது நாட்டில் பல மாவட்டங்களைப் பொறுத்தமட்டில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் கொரோனாத் தொற்று என்பது கிராமங்கள் வரை சென்றிருக்கின்றது. இதற்கு முக்கிய காரணம் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் தொற்று இனங்காணப்பட்டால் அந்தப் பிரதேசத்தின் அனைத்து மக்களையும் பரிசோதிக்கக்கூடிய வசதிகள் இங்கு குறைவாக இருக்கின்றது. பி.சி.ஆர். இயந்திரம் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் மாத்திரமே இருக்கின்றது. அதுவும் போதாமல் இருக்கி றது. ஆனாலும் மாவட்டத்திலுள்ள தனவந்தர்களும், வர்த்தகர்களும் முன்வந்து இதற்கான உதவிகளைச் செய்வது மிகவும் பாராட்டத்தக்க விடயம். அரசானது தற்போயை சூழ்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் இறக்குமதிசெய்வது சம்மந்தமாகவும் மேலும் பல வாகனங்களை வேறு தேவைகளுக்காக இறக்குமதிசெய்வது தொடர்பிலும் அமைச்சரவையூடாக முடிவெடுத்திருப்பதாகவும், அதன் பின் முடிவு மீளப்பெற்றிருப்பதாகவும் தகவல்கள் வந்துள்ளன. தற்போதைய நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகனம் என்பது முக்கிய தேவை அல்ல. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வசதிகளை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. மாறாக அதற்கு செலவு செய்யும் பணத்தை இந்தக் கொவிட் தொற்றை இல்லாமல் ஒழிப்பதற்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்து அனைத்து மாவட்டங்களுக்கும் விநியோகித்து அந்தந்த மாவட்ட மக்கள் பயன்பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ப-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொரோனா தொற்றாளர் தலைமறைவு

கொழும்பு, மே 31

கொரோனாத் தொற்றாளராக உறுதிப்படுத்தப்பட்ட நபர் ஒருவர், அவரது வீட்டில் இருந்து தலைமறைவாகியுள்ளார்.

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெகசின் வீதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனுக்கு, கடந்த 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து சுகாதாரப் பிரிவினர் குறித்த இளைஞனை, சிகிச்சை மத்திய நிலையத்துக்கு அழைத்துச் செல்வதற்காக, அவரது வீட்டுக்குச் சென்றுள்ளனர். அங்கு அவர் தலைமறைவாகியமையை அறிந்தனர்.

இதனையடுத்து குறித்த நபரின் புகைப்படத்தை வெளியிட்டுள்ள பொலிஸார், 071 8591587, 011 2694019 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தகவல் வழங்குமாறு கோரியுள்ளனர். (எ-4)



# தனிமைப்படுத்தப்பட்டது கிளி. சாந்தபுரம் கிராமம்

**கிளிநொச்சி, மே 31**

**கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சாந்தபுரம் கிராமம் நேற்றுமுன்தினம் முதல் மறுஅறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.**

கடந்த சில நாள்களில் அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து குறித்த கிராமத்தை தனிமைப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். 780 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 428 பேர் சாந்தபுரம் கிராமத்தில் வசிக்கின்றனமை குறிப்பிடத்தக்கது. (ப-214)

## திடீரென உயிரிழந்தவருக்கு கொரோனாத் தொற்று உறுதி

அம்பாறை,மே 31

வீட்டில் திடீரென உயிரிழந்தவருக்கு, கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கிண்ணியா பைசல் நகரைச் சேர்ந்த நபர் ஒருவர் வீட்டில் உயிரிழந்துள்ளார்.

அவருக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று கிண்ணியா சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

70 வயதுடைய குறித்த நபருக்கு உயர் குருதி அழுத்தம் இருந்துள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (எ-4)

# காலம் கடந்ததும் அரசுக்கு ஞானம்

### *சிங்கள ராவய அமைப்பு விசனம்*

கொழும்பு,மே 31

கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலையின் வீரியம் மற்றும் இறப்புக்கள் அதிகரித்தவுடன் நாட்டை முடக்கி என்ன பயன். அதற்கான காலத்தை கடந்து தற்போது வீணாக நாட்டை முடக்கியுள்ளது அரசு.

இவ்வாறு சிங்கள ராவய அமைப்பின் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலை ஆரம்பித்தவுடனேயே நாட்டை முடக்கியிருக்க வேண்டும். தற்போது நாட்டை முடக்குவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை.

மூன்றாவது அலை உருவானபோது நாட்டை முடக்குமாறு நாம் விடுத்த கோரிக்கையை அரசு சரியாக நடைமுறைப்படுத்தவில்லை. இதன் காரணமாக மூன்றாவது அலை வேகமாகப் பரவியது. இன்று இறப்புக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது. அரசின் பொறுப்பற்ற செயற்பாடுகளே இதற்குக் காரணம்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்ததும், மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று நம்பிக்கை வெளியிடப்பட்டது. எனினும் அது எதுவும் இடம்பெறவில்லை.

நாட்டை வெறுமனே முடக்குவதால் எதுவும் நடைபெறப்போவது இல்லை - என்றார். (எ-4)





## வர்த்தகர், வியாபாரிகளுக்கு அன்டிஜென் பரிசோதனை

வவுனியா, மே 31

வவுனியாவில் பயணத்தடை காலத்தில் அத்தியாவசிய பொருள்களை வழங்க அனுமதியளிக்கப்பட்ட வர்த்தகர்கள், மரக்கறி விற்பனையாளர்கள் மற்றும் வாகனச் சாரதிகளுக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் நேற்றுக் காலை சுகாதாரப் பிரிவினரால் இந்தப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

கொவிட் 19 இன் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் நாடு முழுவதும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், அத்தியாவசிய பொருள்களை வீடுகளுக்கே வழங்க கிராம மட்டத்தில் இருந்து நகரம் வரை சில வர்த்தக நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தோர், மரக்கறி விற்பனையாளர்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டுசெல்லும் சாரதிகள் ஆகியோருக்கு கொவிட் தொற்று தொடர்பான அன்டிஜென் பரிசோதனையே இவ்வாறு முன்னெடுக்கப்பட்டது. (ப-18)



## புரண்டது பஸ் 15 பேர் காயம்

கொழும்பு, மே 31

இரத்தினபுரி நிவித்திகல பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில், 15 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேயிலைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச்செல்லும் போதே அது நேற்றுக் காலை விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் வத்துபிடிவல மற்றும் இரத்தினபுரி போதனா மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-இ)

# வன்னி மருத்துவமனைகளுக்கு பி.சி.ஆர் இயந்திரங்களை வழங்குக

### இந்தியா, பிரித்தானியாவிடம் செல்வம் எம்.பி கோரிக்கை

வவுனியா,மே 31

வன்னியில் உள்ள மருத்துவமனைகளுக்கான பரிசோதனை உபகரணங்களை வழங்குமாறு இந்தியா மற்றும் பிரித்தானியத் தூதரகங்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த கோரிக்கை கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கொரோனாத் தொற்றாளர்களை அடையாளம் காணும் பரிசோதனை வசதிகள் வன்னியில் உள்ள மருத்துவமனைகளில் இல்லாததால், உடனடியாகத் தொற்றாளர்களை அடையாளம் காண முடியாமல் உள்ளது. குறிப்பிட்ட அளவான பரிசோதனைகளை செய்வதற்கே வசதி இருப்பதால் அதன் முடிவுகள் வருவதற்கு மூன்று அல்லது நான்கு நாள்கள் எடுக்கின்றன. இதனால் தொற்று அதிகமாகப் பரவுகின்ற சூழ்நிலை காணப்படுகிறது.

இந்த தொற்றுப் பரிசோதனைக்கான உபகரணங்கள் இல்லாமையும் அவற்றுக்கான பற்றாக்குறையாலுமே இந்த அவல நிலை ஏற்பட்டுள்ளது. இதனை உடனடியாகச் சீர்செய்யவேண்டும். எனவே காலம் தாழ்த்தாமல் தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்கும், உடனடியாக முடிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும், வன்னி மாவட்ட மருத்துவமனைகளுக்கு உபகரணங்களைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றுள்ளது.

இதேவேளை வன்னி மாவட்ட மருத்துவமனைகளுக்கு சிறப்புரிமை அடிப்படையில் இந்தப் பரிசோதனை உபகரணங்களை உடனடியாக வழங்குமாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடமும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ப-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரைப் பாதுகாப்பதை விடுத்து பொழுதுபோக்கில் மக்கள் ஆர்வம்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் விசனம்

**கொழும்பு,மே 31**

**கொரோனாத் தொற்றிலிருந்து தமது உயிரைப் பாதுகாப்பதை விடுத்து, ஒரு பகுதியினர் பொழுதுபோக்குக்காக வெளியில் நடமாடுவதில் ஆர்வமாக உள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் உதவிச் செயலாளர் நவீன் சொய்சா தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களின் உதவி அவசியம். பொதுமக்கள் போக்குவரத்து விதிமுறைகளை மீறியதாலேயே போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை நீடிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பலர் வெளியில் சென்று பொருள்களை வழங்குவதற்காக கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினர். சிலர் பொருள்களையோ, மருந்துகளை வாங்குவதற்காகவோ வெளியில் செல்லாமல் வீடுகளுக்குள் இருக்கின்றனர்.

புதுவருடத்துக்கு முன்பாகவே போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை விதித்திருக்க வேண்டும். விடுமுறைக் காலத்தில் பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளைப் புறக்கணித்தனர்.

அத்துடன் உயிர்களைப் பாதுகாப்பதற்கான ஒத்துழைப்பை வழங்குவதற்கு பதில் பொழுதுபோக்குக்காக வெளியில் செல்வதற்கும் அதிகளவானோர் ஆர்வமாகவுள்ளனர் - என்றார். (எ-4)

# பேர்ள் கப்பல் தீப்பற்றியதால் கடற்பரப்புக்கு பெரும் பாதிப்பு

## பொறுப்புடையவர்களிடம் விசாரணை

கொழும்பு. மே 31

கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் எக்ஸ்பிரஸ் பேர்ள் தீப்பற்றியதால், இலங்கைக் கடல் மற்றும் கடல் சுற்றாடலுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் இந்த விடயத்தில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் அனைவரிடமும், எதிர்வரும் நாள்களில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவுகள் அகற்றல் இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

குறித்த கப்பல், இலங்கைக் கடற்பரப்பில் நங்கூரமிடுவதற்கு முன்னர் துறைமுக அதிகார சபையின் அனுமதியைப் பெறவில்லை. அத்துடன், கப்பலில் இருந்த கொள்கலன் ஒன்றில் இரசாயனப் பதார்த்த கசிவு ஏற்பட்டுள்ளது என்பதையும், கப்பலின் நிர்வாகத் தரப்பினர் முன்கூட்டியே அறிவிக்கவில்லை.

அபாயகரமான நிலையில் நாட்டின் கடற்பரப்புக்குள் இந்தக் கப்பல் நங்கூரமிடுவதற்கு அரசு அனுமதி வழங்கவில்லை. இந்தக் கப்பலில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக இலங்கையின் கடற்பரப்புக்கும், கடல் வாழ் உயிரினங்களுக்கும் பெருமளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் ஏற்பட்டுள்ள பாதிப்பை தற்போது மதிப்பீடுசெய்ய முடியாது. கப்பலில் இருந்த கொள்கலன்கள் தீக்கிரையாகி யுள்ளன. கப்பல் தரை தட்டியவுடன் முன்னெடுக்க வேண்டிய சட்ட நடவடிக்கைகள் ஆராயப்படும்- என்றார். (எ-4)

# தேசிய பாதுகாப்பு இவ்வளவு தானா?

## சஜித் கேள்வி



கொழும்பு,மே 31

தேசிய பாதுகாப்பு தொடர்பில் பலமுறை பேசும் அரசு, இலங்கை கடற்பரப்புக்குள் ஆபத்தான கப்பலொன்று வரும் வரை ஏன் அமைதியாக இருந்தது. அவ்வாறெனில் தேசியப் பாதுகாப்பு பேச்சளவில் மட்டும் தானா? இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக் கடற்பரப்பில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் மூலம், சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் **பக்கச் சார்பற்ற விசாரணை** நடத்தப்பட வேண்டும். உண்மையயான விபரங்களை வெளிப்படுத்த வேண்டும்.

அமிலக் கசிவைத் தொடர்ந்து கப்பல் கட்டாரில் உள்ள ஹமாத் துறை முகத்துக்குள் நுழைய முயன்றுள்ளது. எனினும், கட்டார் அரசு கப்பலை துறை முகத்துக்குள் பிரவேசிக்க அனுமதிக்கவில்லை.

இவ்வாறான அபாயத்துடன் இலங்கையின் கடற்பரப்புக்குள் அந்தக் கப்பல் திடீரென எவ்வாறு பிரவேசித்தது- **என்றார்.** (எ-4)

# கப்பலால் ஏற்பட்ட மாசுக்கள் ஆராய்வதற்கு நிபுணர் குழு

கொழும்பு,மே 31

கொழும்பு துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் தீப்பற்றிக்கொண்ட கப்பலால், ஏற்பட்டுள்ள மாசுக்கள் தொடர்பில் ஆராய்வதற்கு, நிபுணர்கள் குழுவை நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைவாக, சமுத்திரவியல் தொடர்பான நிபுணர்களும், பல்கலைக்கழக கலாநிதிகளும் இந்தக் குழுவில் நியமிக்கப்படவுள்ளனர்.

கடல்வாழ் உயிரினங்கள் உட்பட கடல் வளங்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டம் தொடர்பிலும் இந்தக் குழு ஆராயும்.

அத்துடன் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டுள்ள மாசுக்களைக் கணிப்பிட்டு நஷ்டஈடு பெறுவதற்கான சிபார்சையும் இந்தக் குழு முன்வைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# தீப்பற்றிய கப்பலில் மீட்கப்பட்ட இரசாயனம்

## விஞ்ஞானிகள் குழப்பம்

கொழும்பு,மே 31

இலங்கைக் கடற்பரப்பில் பற்றி எரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலிருந்து மீட்கப்பட்ட இரசாயன பொருள் தொடர்பில், துல்லியமான தகவல்கள் கிடைக்கும் வரை கணிப்பது கடினம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கப்பலில் இருந்து சிதறடிக்கப்பட்ட இரசாயனப் பொருள்களின் மூலம் புற்றுநோய்க்கான ஆபத்து உள்ளது என்று கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையத்தின் பொது மேலாளர் மருத்துவர் டர்னி பிர தீப் குமார தெரிவித்துள்ளார்.

அதேவேளை வேதியியல் பொருள்களால் ஏற்படும் நீண்டகால சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து இந்த நேரத்தில் எந்தவொரு திட்டவட்டமான அறிக்கையும் வெளியிட முடியாது என்று விலங்கியல் மூத்த பேராசிரியர் எம்.பத்மலால் தெரிவித்துள்ளார். (எ-4)

# தீப்பற்றிய 'பேர்ள்' கப்பல் பிளவுபட வாய்ப்பில்லை

## கடற்படைத் தளபதி தெரிவிப்பு



கொழும்பு,மே 31

கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல், இரண்டாகப் பிளவுப் படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிசாந்த உளுகேதென்ன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீப்பற்றிய கப்பலிலிருந்து எண்ணெய் கசிவு ஏற்பட்டால், அதற்குத் தேவையான அவசர நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

பெரும்பாலும் கப்பலில் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்த, இலங்கைக் கடற்படையால் பயன்படுத்தக்கூடிய டோரா படகு மற்றும் மேலும் பல படகுகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படைக்கு, எண்ணெய் கசிவு தொடர்பான நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான விசேட நிபுணத்துவம் உள்ளது. எண்ணெய் கசிவு ஏற்பட்டால் அவர்களின் ஒத்துழைப்பு கண்டிப்பாகக் கிடைக்கும்.

சீரற்ற வானிலை காரணமாகவே தீ வேகமாக பரவலடைந்தது. தற்போது தீ ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, கப்பல் இரண்டாக பிளவடைந்து கடலுக்குள் மூழ்கும் அபாயத்தைக் கடந்துள்ளது - என்றார். (எ-4)

# சுற்றுலாவுக்கு புதிய கொள்கை

கொழும்பு,மே 31

சுற்றுலா தொடர்பான புதிய தேசிய கொள்கைத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

சுற்றுலா அமைச்சு, சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஆகியவை இணைந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

இதற்காக துறைசார்ந்தோரின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையில், சுற்றுலாத் தொழிற்றுறையைக் கட்டியெழுப்பும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரிஷாத் எம்.பியின் கைதுக்கு எதிரான அடிப்படை உரிமை மனு பரிசீலனைக்கு

*நீதியரசர்களில் ஒருவர் வழக்கிலிருந்து விலகல்*

கொழும்பு, மே 31

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினரான ரிஷாத் பதியுதீனின் அடிப்படை உரிமை மனு கடந்த வெள்ளிக்கிழமை உயர்நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்டவிரோதமாக தான் தடுத்துவைக்கப்பட்டுள்ளேன் எனவும், தன்னை விடுதலைசெய்யுமாறு இடைக்கால உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் எனவும் கோரி, சட்டத்தரணி கௌரி தவராசா ஊடாக ரிஷாத் பதியுதீன் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, நீதியரசர்களில் ஒருவரான உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் தலைவராக இருந்த ஜனக் சில்வா, தான் இந்த மனு மீதான விசாரணைக்குழுவில் இருந்து விலகுகிறேன் எனத் தெரிவித்தார்.

இந்த நிலையில் புதிய நீதியரசர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டதையடுத்து மனு மீதான பரிசீலனையை ஜூன் 4 ஆம் திகதி வரை ஒத்திவைக்க உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணையில் ரிஷாத் பதியுதீன் தரப்பு சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி தவராசாவின் வழிகாட்டலில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான பாயிஸ் முஸ்தபா, அனில் சில்வா, சிரேஷ்ட சட்டத்தரணிகளான என்.எம்.சஹீட், ருஷ்தி ஹபீப் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தவிசாளரும் சட்டத்தரணியுமான அமீர் அலி ஆகியோர் முற்பட்டிருந்தனர். (கு-22)

# தொழில் வாய்ப்பைப்பெற சீனாமொழியும் அவசியம்



## கூறுகின்றார் அமைச்சர் வாசுதேவ

**கொழும்பு,மே 31**

**இலங்கையைச் சேர்ந்தவர்கள், சீன நிறுவனங்களில் தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், சீனா மொழியைக் கற்றுக்கொள்வது சிறந்தது.**

இவ்வாறு நீர்ப்பாசன அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீன நிறுவனங்களிடம் நாங்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் அல்லது சீன வேலைத்திட்டங்களில் நாங்கள் தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் எமக்கு சீனா மொழி தெரிந்திருக்க வேண்டும் என்பது மேலதிக தகுதியாக அமையும்.

அதேவேளை, அண்மையில் நிறைவேற்றப்பட்ட துறைமுக நகர ஆணைக்குழு சட்டவரைவு அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டதல்ல. அரசில் அங்கம் வகிக்கின்ற அனைத்துக் கட்சிகளும் இந்தச் சட்டவரைவில் பல திருத்தங்களைக் கொண்டுவரும்படி தெரிவித்தன.

அதற்கமைய உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்திலும் திருத்தங்கள் அவசியம் என்பது வலியுறுத்தப்பட்டது. நாங்கள் எதிர்பார்த்த சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன- என்றார். (எ-4)

ஏப்ரல் 21 தாக்குதல்

## குற்றவாளிகளுக்கு எதிராக விரைவில் வழக்குத் தாக்கல்

கொழும்பு,மே 31

ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து குற்றவாளிகளுக்கு எதிராகவும், இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் சட்டமா அதிபரால், வழக்குத் தொடுக்கக்கூடியதாக இருக்கும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் எந்தவிதத்திலும் ஸ்தம்பிதமடையவில்லை. சம்பவத்துடன் தொடர்புபட்ட அனைத்து குற்றவாளிகளுக்கு எதிராகவும் இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யக்கூடியதாக இருக்கும்.

அமெரிக்காவில் நடைபெற்ற செப்ரெம்பர் 11 தாக்குதலுடன் தொடர்பு பட்ட பிரதான சூத்திரதாரிக்கு எதிராக 18 ஆண்டுகள் கடந்தும் இன்னும் வழக்கு தொடுக்கப்படவில்லை. அதேபோன்று லக்ஷ்மன் படுகொலையுடன் தொடர்புபட்டவருக்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கு மூன்று ஆண்டுகள் சென்றன.

ஏப்ரல் 21 தாக்குதல் நடைபெற்று ஈராண்டுளே கடந்துள்ளன. எனினும், இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சட்டமா அதிபரால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த குறைபாடுகளில் 75 வீதத்தை நிவர்த்திசெய்து அனுப்பியுள்ளோம்.

இது விடயம் தொடர்பில் சட்டமா அதிபருடன் பணியாற்றுவதற்காக சி.ஐ.டி மற்றும் ரி.ஐ.டியைச் சேர்ந்த 54 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்- என்றார். (எ-4,.44)



## வெளிநாடுகளால் இலவசமாக கிடைக்கும் தடுப்பூசிகளையே அரசு எதிர்பார்த்துள்ளது

*செல்வம் எம்.பி குற்றச்சாட்டு*

வவுனியா,மே 31

வெளிநாடுகளால், இலவசமாக வழங்கும் தடுப்பூசிகளை மாத்திரம் இந்த அரசு நம்பியிருக்கின்றதே தவிர, நிதி ஒதுக்கி அதனைக் கொள்வனவு செய்வதற்கு பின்னடிக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

பயணத் தடையால் அன்றாட கூலித்தொழிலை நம்பியுள்ள மக்கள் உணவுக்கு கஸ்ரப்படும் சூழ்நிலை தற்போது உருவாக்கப்பட்டிருக்கின்றது. எனவே அரசு இதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும். கொரோனா விடயத்தில் அரசு சரியாகத் திட்டமிடாததால் நாடு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

வடகிழக்கு மக்களுக்கு இதுவரை தடுப்பூசிகள் வழங்கப்படவில்லை. அது கவலை தருகின்றது. தற்போது யாழ் மற்றும் வன்னியில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச்செல்கின்றது. வடக்குக்கு 50 ஆயிரம் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன என்று கூறுகின்றார்கள். அது போதாத நிலமை உள்ளது.

ஒட்டுமொத்த மக்கள் மீதும் இந்த அரசுக்கு அக்கறையில்லை. வெளிநாடுகளால் இலவசமாகவோ, இனாமாகவோ வழங்கும் தடுப்பூசிகளை மாத்திரமே அரசு கொள்வனவு செய்கிறது. தாங்கள் வாங்கப்போகிறோம் என்று கூறுகின்றார்களே தவிர அதற்கான நிதி ஒதுக்கீட்டை இதுவரை செய்யவில்லை.

சும்மா தந்தால் வாங்கும் நிலைமையை அரசு எதிர்பார்த்து நிற்கிறது. இது நாட்டுமக்களைப் பாதுகாக்கும் செயற்பாடாக இருக்குமா என்பது கேள்விக்குறியே. ஏனெனில் தடுப்பூசிகள் மூலமாக மாத்திரமே வெளிநாடுகள் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தியுள்ளன- என்றார். (ப-110)

## ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கிய முடிவு தவறு

*கடந்த அரசுமீது குற்றச்சாட்டு*

கொழும்பு,மே 31

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்குவதற்கு எடுத்த முடிவு தவறானது என்று நிதி மற்றும் மூலதன சந்தைகள், பொது நிறுவன சீர்திருத்தங்கள் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு இலங்கையின் முன்னாள் அரசே வழங்கியது. துறைமுகம் கடன் வலையில் சிக்கியுள்ளதால், அதைக் கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று முன்னாள் அரசு தெரிவித்தது.

எவ்வாறாயினும், ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் எடுக்கப்பட்ட முடிவு தவறானது. இதனை தற்போதைய அரசு உணர்கிறது. இது போன்ற கொள்கையை தற்போதைய அரசு பின்பற்றாது.

அதேவேளை கொழும்பு போர்ட் சிற்றி நிலம் இலங்கைக்குச் சொந்தமானது. அதில் ஒரு பகுதி மட்டுமே சீனாவுக்கு 99 ஆண்டுகள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது- என்றார். (எ-4)

## இலங்கையில் பரவும் கொரோனா; ஆராய்ச்சிகள் ஜூனில் ஆரம்பம்!

கொழும்பு, மே 31


இலங்கையில் பரவும் கொரோனா வைரஸ் தொடர்பான புதிய ஆராய்ச்சிகள் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படும் என்று சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் செல் உயிரியல் நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் இலங்கையில் பரவும் கொரோனா வைரஸ் இங்கிலாந்தில் பரவிவரும் உருமாறிய வைரஸ் என்று கண்டறியப்பட்டது. இந்த வைரஸால் நாட்டில் தொற்று பரவி வருகின்றதா? அல்லது வேறு உருமாறிய வைரஸ் நாட்டுக்குள் பரவிவருகின்றதா என்பது ஆய்வுகள் மூலம் கண்டறியப்படும்.

எவ்வாறாயினும் சுகாதார அமைச்சின் மூலம் கொரோனா தொற்றிய நோயாளிகளிடம் பெற்றுக்கொண்ட மாதிரிகளை அனுப்பினால், அவற்றை பரிசோதனைசெய்ய எமது நிறுவனம் தயாராக உள்ளது. இதனிடையே கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் தீப்பிடித்து கடலில் மூழ்கிய கப்பலில் இருந்து மீட்கப்பட்ட இரண்டு இந்தியப் பிரஜைகளில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவரிடம் இருந்து பெறப்பட்ட மாதிரிகளை எமது நிறுவனத்துக்கு அனுப்பிவைக்குமாறு அறிவித்துள்ளோம். அவை இன்னும் கிடைக்கப் பெறவில்லை. அதற்கான ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படும்- என்றார். (எ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இளமைக்கு தேங்காய்ப்பால் பேஸ்பக்





உங்கள் சருமம் எப்போதும் இளமையாக இருக்க தேங்காய்க்பாலை பயன்படுத்தலாம். தேங்காய்ப்பால் சாப்பிடுவது எப்படி மிகவும் நல்லதோ அதேபோல் அழகுக்கும் அசர வைக்கும் நன்மைகளை தருகிறது.

. தேங்காய்ப்பால் சருமப் பொலிவுக்கு உதவுகிறது.

. கருமையை போக்குகிறது. நிறத்தைக் கூட்டுகிறது.

. சுருக்கத்தைப் போக்குவதோடு கூந்தல் வளர்ச்சிக் கும் நன்மைகளை தருகிறது.

தேங்காய்ப்பாலை தினமும் பயன்படுத்த வேண்டிய தேவையில்லை. வாரம் ஒருமுறை பயன்படுத்தினால் உங்கள் சருமத்தில் என்னென்ன மாற்றங்கள் கிடைக் கும் என பார்க்கலாம்.

* கரட் சாறு 1 டீஸ்பூன், தேங்காய்ப்பால் 1 டீஸ்பூன் இரண்டையும் நன்றாக கலந்து முகத்துக்கு போடுங் கள். பத்து நிமிடங்கள் கழித்து கழுவ வேண்டும். ஒருநாள் விட்டு ஒருநாள் இப்படி செய்து வந்தால் உங்கள் சருமநிறம் அதிகரிக்கும்.

* முல்தாணிமெட்டி 1 டீஸ்பூன், தேங்காய்ப்பால் 1 டீஸ் பூன் இரண்டையும் நன்றாக கலந்து முகத்துக்கு பைக் போல் போடுங்கள். வாரம் ஒருமுறை செய்ய வேண்டும். விரைவில் அழகு பளிச்சிட ஆரம்பிக்கும். அதிகப்படியாக இருக்கும் எண்ணெயை முல்தானிமெட்டி ஈர்த்துவிட , சருமத்தை தேங்காய்ப் பால் மிருதுவாக்கி விடும்.

* உருளைக்கிழங்கு ஜூஸ் 1 டீஸ்பூன், தேங்காய்ப் பால் 1 டீஸ்பூன், பச்சை பயறு மா 1 டீஸ்பூன். இந்த மூன்றையும் கலந்து பேஸ்ட் ஆக்கி முகத்துக்கு பைக் போடுங்கள். காய்ந்ததும் கழுவி விடுங்கள். வாரம் இருமுறை இதைச் செய்தால் போதும். முகம் பிரகா சமாக ஜொலிக்கத் தொடங்கும்.



## மாங்காய் துவையல்

**தேவையான பொருள்கள்** மாங்காய் 2 (பொடியாக வெட்டவும்), உப்பு, பெருங்காயத்தூள் சிறிதளவு,

**வறுப்பதற்கு தேவையான பொருள்கள்:** கடுகு1 டீஸ் பூன், வெந்தயம் அரை டீஸ்பூன், சிவப்பு மிளகாய், பெருங்காயத்தூள் சேர்த்து வறுத்து ஆறவிட்டு மிக்ஸி யில் போட்டு அரைக்கவும். இதனுடன் உப்பு, மாங்காய் துண்டுகளைச் சேர்த்து துவையலாக அரைத்து எடுக்க வும். சுவைக்க தூண்டும் துவையல் ரெடி.





## காய்ச்சல் மற்றும் சளியை தவிர்க்க நீங்கள் பின்பற்ற வேண்டியவை!

குளிர்காலத்தில், பொதுவாக காய்ச்சல் அல்லது சளி பிடிக்க அதிக வாய்ப்புள்ளது. சில காரணங்களால், வானிலை மிகவும் குளிராக இருக்கும்போது, பலர் பெரும்பாலும் சூடான மற்றும் சூடான உணவை சாப்பிட விரும்புகிறார்கள்.

**இரவில் மட்டுமே காய்ச்சல் ஏற்படுகிறது**
கடைகளில் வாங்கி சாப்பிடும்போது பக்டீரியா மற்றும் வைரஸ்கள் உங்கள் உடலைத் தாக்கும் வாய்ப்பு அதிகம். கூடுதலாக, இந்த நேரத்தில், உடலின் நோய் எதிர்ப்பு சக்தி சிறிது பலவீனமடைந்து மந்த நிலையில் இருக்கும். எனவே, நோய் விரைவாக பரவ வாய்ப்புள்ளது.

**எலுமிச்சை, தேன் மற்றும் தேநீர்**
காய்ச்சல் மற்றும் சளி தவிர்ப்பதற்காக குளிர் காலத் தில் எலுமிச்சை சாறு மற்றும் தேனுடன் சூடான கருப்பு அல்லது பச்சை தேநீர் குடிக்கவும், ஏனெ னில் இது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டுகிறது மற்றும் நோயின் விளைவுகளைத் தடுக்கிறது.

**புரத உணவு அவசியம்**
குளிர்காலத்தில் நோய் எதிர்ப்பு சக்தி மிகவும் பலவீ னமாகிறது. உடலில் புரதம் இல்லாததே இதற்கு முக்கிய காரணம். இவை நோயெதிர்ப்பு மண்டலத் தின் வலிமையைக் குறைக்கின்றன. எனவே, நீங் கள் குளிர்காலத்தில் அதிக புரத உணவுகளை சாப்பிட வேண்டும்.

**கையை சுத்தப்படுத்தி பயன்படுத்துங்கள்**
அலுவலக கணினி விசைப்பலகைகளில் ஆயிரக் கணக்கான பக்டீரியாக்கள் உள்ளன. எனவே, உணவை சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் கைகளை சுத்தப்படுத்துவதால் பக்டீரியாவின் பாதிப் புகளைத் தடுக்கலாம் மற்றும் காய்ச்சல் மற்றும் சளி ஆகியவற்றைத் தடுக்கலாம்.

**வியர்வை அவசியம்**
உங்கள் நுரையீரலை எல்லா நேரங்களிலும் சுத்த மாக வைத்திருங்கள். அதை செய்ய, நீங்கள் ஒவ் வொரு நாளும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். நீங்கள் இந்த வழியில் உடற்பயிற்சி செய்யும்போது, நீங்கள் வியர்த்து, குளிர்காலத்தில் உங்கள் உடலில் உள்ள நச்சுகள் வியர்வையால் வெளியேற்றப்படு கின்றன. எனவே, இது காய்ச்சல் மற்றும் மூக்கு ஒழுகுதல் பாதிப்புகளைக் குறைக்கிறது.

**நல்ல தூக்கம் அவசியம்**
தூக்கமின்மை உடலில் நோயின் விளைவுகளையும் அதிகரிக்கும். எனவே, குளிர்காலத்தில் ஒரு நல்ல இரவு தூக்கத்தைப் பெறுவது அவசியம்.

**விற்றமின் சி**
உடலின் நோய் எதிர்ப்பு சக்தியின் ஆரோக்கியத் துக்கும் செயற்பாட்டுக்கும் விற்றமின் சி அவசியம். எனவே, குளிர்காலத்தில், விட்டமின் சி நிறைந்த பழங்கள் மற்றும் காய்கறிகளை தினமும் உட் கொள்ள வேண்டும். குறிப்பாக குளிர்காலம் தோடம் பழங்களுக்கான பருவமாகும், எனவே அதை தவ றாமல் வாங்கி சாப்பிடுங்கள்.

## அருந்துங்கள் கற்றாழை சாறு

**சோற்றுக் கற்றாழையின் நற்குணங்கள்**
கற்றாழையில் உள்ள ஜெல் வழவழப்பாக இருக்கும் காயங்கள், வீக்கம் ,.நாள்பட்ட புண்கள். அரிப்பு மற்றும் தோல் சம்பத்தப்பட்ட வியாதிகளைக் கட்டுப் படுத்தி குண மளிக்க வல்லது.
கற்றாழையில் ஆலோக்டின், ஆலோயின், ஆலொஎ மொடின்ம்ரெசின்கல், தேநின்கள், பாளி சக்ரைடுகள் போன்ற பல வேதிப் பொருS;Fள் உள்ளன.

**வெளிப் புற பயன்கள் ;**
கற்றாழையில் உள்ள ஜெல்லை முகத்திலும் உடலிலும் பூசிக் கொள்ளலாம். சருமத்தில் ஏற்படக்கூடிய நிண நீர் திசுக்களில் வளர்ந்து அவ்விடங்களில் ஏற்படும் புண், கறுப்பான புள்ளிகள், தேமல், பரு மறையவும் சூரிய வெப்பத்திலிருந்து பாதுகாக்கவும் உதவுகிறது .

**உட்புற பயன்கள்;**
கற்றாழையின் சாற்றை உட்கொண்டால் 25 வகையான வியாதிகளை குணப் படுத்துகின்றது. அJ;தோடு நோய் எதிர்ப்பு சக்தியும் கொடுக்கின்றது. பெண்களுக்கு வெள்ளை படுதல், மாதவிடாய் , கருப்பை கோளாறு களையும் தீர்க்கின்றது. சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், மூலம் சம்பந்தமான நோய், வாயுத் தொல்லை, உடல் மற்றும் மூட்டு வலி, அல்சர் முதலியவையும் நீக்க உத வுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறுக்கு வழிகள் என்றுமே பலன் தாராது

சலவைத் தொழிலாளியிடம் கழுதை ஒன்று இருந்தது. அதற்கு தேவையான தீவனத்தை அவனால் தர இயலவில்லை. வயிறு நிறைய புல் மேய்வதற்கு மேய்ச்சல் நிலமும் அந்த பகுதியில் இல்லை. கழுதையின் நிலை கண்டு மிகவும் கவலைப்பட்டான் தொழிலாளி.

ஒருநாள் காட்டு வழியே நடந்து சென்றான். அப்போது இறந்த புலியைக் கண்டு திட்டம் ஒன்று தீட்டினான்.

அவன் மனதில், "இறந்த புலியின் தோலை உரித்து, கழுதை மீது போர்த்தி, வயல்களில் மேய விடலாம். உண்மையாக புலி மேய்வதாக எண்ணி, எதுவும் பேசாமல் இருந்து விடுவர் மக்கள்; கழுதை வயிறார மேயும்" என எண்ணினான். புலித்தோலை உரித்து, கழுதை மீது போர்த்தி, நன்கு விளைந்த வயல்களில் மேய விட்டான்.

அவன் எண்ணியபடியே பயந்து ஓடினர் மக்கள். வயல்களில் மேய்ந்த கழுதையை விரட்ட யாருமில்லை. வயிறு நிறைய மேய்ந்து கொழுத்தது கழுதை.

ஒருநாள் வயலில் கழுதை மேய்ந்து கொண்டிருந்தது. அப்போது, அந்தப் பக்கம் வந்த பெண் கழுதை ஒன்று, உரத்த குரலில் கத்தியது; அதைக் கேட்டதும், புலித்தோல் போர்த்தியபடி மேய்ந்த கழுதையும் உற்சாகத்துடன் கத்தியது. இதை கண்டதும் திரண்ட மக்கள் ஏமாற்றி எமது வயல் நிலங்களில் மேய்ந்தது என கழுதையை தடியால் அடித்து விரட்டினர். குழந்தைகளே... குறுக்கு வழிகள் என்றுமே பலன் தாராது; யாரையும் ஏமாற்றக்கூடாது.



## மூதுரை

**கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி**
**தானும் அதுவாகப் பாவித்து- தானுந்தன்**
**பொல்லாச் சிறகைவிரித்(து) ஆடினால் போலுமே**
**கல்லாதான் கற்ற கவி**

### விளக்கம்

காட்டில் மயில் ஆடுவதைப் பார்த்த வான்கோழி உடனே தன்னையும் அதைப் போலவே நினைத்து தன்னுடைய அழகில்லாத சிறகை விரித்து ஆடுவதைப் போன்றதே கல்வி கற்காதவன் சொல்லும் கவிதை ஆகும். அதனால் ஒரு பயனும் இல்லை.







## ஒத்தசொற்களை எழுதுக.

| | | |
|---|---|---|
| அளகு | ⟶ | மயில் |
| கவிதை | ⟶ | கவி |
| மக்கள் | ⟶ | மாந்தர் |
| தரு | ⟶ | மரம் |
| தீங்கு | ⟶ | தீமை |

## வழிகாட்டுவோம்







## சிகிரியாக் குன்று

- ☐ காசியப்ப மன்னனால் கி.பி. 5ஆம் நூற்றாண்டு வடிவமைக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட்டது.
- ☐ 1144அடி உயரமான இக்குன்றினுள் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சித்திரங்கள் பல உள்ளன. மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள நகர்ப் பகுதியில் அமைந்துள்ளது.
- ☐ சிங்கம் படுத்திருப்பது போன்ற அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது.
- ☐ இக் குகையினுள் சுவரோவியங்கள் இயற்கை வர்ணங்கள் கொண்டு வரையப்பட்ட பல சித்திரங்கள் காணப்படுகின்றன. இவைகளில் பல இன்னும் அழியாமல் அழகாகக் காட்சி தருகின்றன.
- ☐ மலையுச்சியில் அரண்மனை மற்றும் தடாகங்களின் சிதைவுகள் தற்போதும் காணப்படுகின்றன.

# நாக்கு: அறிந்துகொள்வோம்



"நரம்பில்லா நாக்கு நாலுவிதமாகப் பேசும்...". "எலும்பில்லா நாக்கு எப்படி வேண்டுமானாலும் வளையும்...". "இரட்டை நாக்கு நேரத்துக்கு ஏற்றபடி மாறி மாறி பேசும்..." நாக்கு பற்றி இப்படி எல்லாம் கூறுவோர் உண்டு. பேச்சுக்கு அடிப்படையான உறுப்பு நாக்கு.

வினாடிக்கு, 500 முதல், 2 ஆயிரம் வரை ஒலி அலைகளை வெளிப்படுத்தும் திறன் கொண்டது. நிமிடத்துக்கு, 160 சொற்களைப் பேசுகிறது.

இதனால் தான் சிறந்த பேச்சாளரை, நாவன்மை உள்ளவர் என்கின்றனர். நாக்கின் மையப்பகுதிக்கு, அமைதி மண்டலம் என்று பெயர். இந்த இடத்தில் பேச்சலையை வெளிப்படுத்தும் சக்தி, மிகக் குறைவு. அங்கு சுவை அரும்புகளும் கிடை யாது. அதனால் நாக்கின் மையம் சும்மா இருக்கும் சதைப் பகுதிதான்.

பேச்சு, தொண்டைக் குழிக்குள் இருந்து தான் வருகிறது. பேச்சலையைப் புரட்டி சத்தமாக சொற்களை வெளியிடும் ஒழுங்கை தான் செய்கிறது நாக்கு.

அதன் மற்றொரு உன்னத பண்பு, உணவின் அளவை அறிதல். உணவு என்ற உடனேயே அதோடு ஒட்டி வருகிற அறுசுவை என்ற அடைமொழி ஞாபகத்துக்கு வரும்.

இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கசப்பு, கார்ப்பு ஆகிய சுவைகளை கச்சிதமாகப் பிரித்தறியும் திறன் நாக்குக்கு இல்லை. அதாவது, நாக்கில் மட்டும் அறு சுவைகளையும் சோதித்து தெரிந்து கொள்ள முடியாது. அறிவியல் முடிவின் படி இனிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கசப்பு போன்ற சுவைகளை மட்டுமே, நாக்கால் அறிந்து உணர முடியும். பின் எப்படி, புளிப்பு, துவர்ப்பு போன்றவற்றை அறிய முடிகிறது. இதற்கென்று வாயின் மேல் அண்ணப் பகுதியில் விசேஷ அமைப்பு உள்ளது; இதன் மூலம் இந்த இரு சுவைகளையும் உணர்ந்து கொள்கிறது மூளை.

## ஆங்கில சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள்

| | |
|---|---|
| Happy | மகிழ்ச்சி |
| Peacock | மயில் |
| Comb | சீப்பு |
| Aeroplane | விமானம் |
| Broom | தும்புத்தடி |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### மேலும்...

யில்:

'யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகையின் அடிப்படையில் 61 கிராம அலுவலகர் பிரிவுகள் தடுப்பூசிக்காக ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டிருந்தன. தற்போது அவற்றுடன் மேலும் 22 கிராம அலுவலர் பிரிவுகள் இணைக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும். ஏனைய கிராம அலுவலகர் பிரிவுகளில் உள்ள பொதுமக்களுக்கும் அடுத்தடுத்த கட்டங்களில் தொடர்ந்து தடுப்பூசிகள் வழங்கப்படும்' - என்றார். (ம-26)

### யாழ்ப்பாணத்தில்...

ஒதுக்கப்பட்ட 5 ஆயிரத்து 711 தடுப்பூசிகளில் 2 ஆயிரத்து 948 தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. இது 51.62 சதவீதமாகும்.

காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலேயே அதிகளவானோர் தடுப்பூசி ஏற்றியுள்ளனர். சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலே குறைந்தளவானோர் தடுப்பூசி ஏற்றியுள்ளனர். (ம-ஒ.5)

### கொரோனாவால்....

ரிழந்தவர்.

குறித்த பெண்மணி சுகவீனம் காரணமாக அவரது வீட்டில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். அவரது சடலம் வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. அங்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. (ம-110)

### தாதியர்கள்...

போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். சுகயீன விடுப்புப் போராட்டமாக அவர்கள் தம் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் என்று இலங்கை தாதியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எச்.எம்.எஸ். பி. மெதிவத்த ஊடகங்களிடம் தெரிவித்தார்.

மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் தாதிமார் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அதிகாரிகள் முறையான தீர்வுகளை வழங்கத் தவறியுள்ளனர் இதனாலேயே தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளோம்.

இந்தத் தீர்மானத் திற்கமைய இன்று காலை முதல் நாளை காலை வரையில் பணிகளில் இருந்து எமது சங்கத்தின் உறுப்பினர்கள் விலகியிருப்பார்கள் என அவர் மேலும் கூறினார். (ம-22)

### வடக்கில்....

கூடங்களில் ஆயிரத்து 134 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 101 பேருக் குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவருக்கும், காரைநகர் பிரதேச மருத்துவமனையில் 3 பேருக்கும், காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்கும், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 3 பேருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் 4 பேருக்கும், பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கும், சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 10 பேருக்கும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 20 பேருக்கும், கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 25 பேருக்கும் என 94 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை மற்றும் வட்டக்கச்சி பிரதேச மருத்துவமனைகளில் தலா ஒவ்வொருவர் என 2 பேர் கண்டறியப்பட்டுள்ளனர்.

**வவுனியா**

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 9 பேருக்கும், வவுனியா மாவட்ட மருத்துவமனையில் ன2 பேருக்கும் என 11 பேருக்கும் தொற்றுக் கண்டறியப்பட்டுள்ளது.

**மன்னார்**

மன்னார் கடற்படை முகாமில் 4 பேருக்குத் தொற்றுக் கண்டறியப்பட்டுள்ளது. (ம-ஒ.5)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 23 . 07 . 1953

மறைவு 01 . 05 . 2021

கடந்த (01.05.2021) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தாயார்

### அமரர் திருமதி துரைராசா நாகேஸ்வரி

அவர்களின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து சகல வகையிலும் உதவியவர்களுக்கும், ஈமக்கிரியையில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலம் உள்நாட்டில் இருந்தும், வெளிநாட்டில் இருந்தும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பதாகைகள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (31.05.2021) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

**குறிப்பு :** Covid 19 தொற்று பரவலால் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலை காரணமாக அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுக்கும், மதியபோஷன விருந்துக்கும் அழைக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகிறோம்.

டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு
கோப்பாய்.

**குடும்பத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் கிரியா கலாபமுக்தாமணி**
**"சரகமலவிதஸாரங்கவித்தியா"**
**சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மஹேஸ்வர சிவாச்சாரியார்**

(சர்வதேச இந்து மதகுரு பீடாதிபதி)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள்**
**தேவஸ்தானம்,**
**நாச்சிமார் கோவிலடி,**
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்



### கைலாசபிள்ளை யோகேஸ்வரன்

இணுவில் கிழக்கு, மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை யோகேஸ்வரன் அவர்கள் கடந்த (29.05.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சோதிநாதன்-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சுலோசனா ராணியின் அன்புக் கணவரும் மஹாதிலக் (காலஞ்சென்ற), ஹிமாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியாவின் அன்பு மாமனாரும், பராசக்தி, அருளானந்த பிள்ளை, சிவஞானமூர்த்தி ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (30.05.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இணுவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சிவகுமார் தெய்வநாயகி**
**077 6583293, 021 205 4486**
**யோகேஸ்வரன் ஹிமாலன் மகன்**

## மரண அறிவித்தல்

### வைத்திய கலாநிதி நடராசா கிருஷ்ணராஜா



சுன்னாகம் டாக்டர் சுப்பிரமணியம் வீதியிலுள்ள டாக்டர் ஆ.நடராசா சுதேச வைத்திய சாலையின் வைத்தியரும், சமாதான நீதவானுமாகிய வைத்தியர் நடராசா கிருஷ்ணராஜா அவர்கள் 27.05.2021 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுன்னாகம் டாக்டர் சுப்பிரமணியம் வீதி வைத்தியர் ஆ.நடராசா (நடராசா பரியாரி) நாகரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், அளவெட்டி காலஞ்சென்ற ஆசிரியர் வாதவூரர் மற்றும் (ஓய்வுபெற்ற ஆசிரியை) நவமணி தம்பதியரின் அருமை மருமகனும், வைத்தியர் சம்பூரணராணி (பாப்பாக்கா) அவர்களின் பாசமிகு கணவரும், மகிந்தன் (வடமாகாண கல்வி அமைச்சு), கஜந்தன் (கனடா), அமுதா (சுன்னாகம் - M.T.S. நகையகம்) ஆகியோரின் அருமை தகப்பனாரும், தாரணி, சுதர்சினி (கனடா), சாந்தன் (சுன்னாகம் - M.T.S. நகையகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சந்திரராசா (கனடா), மோகனராசா (பல் வைத்தியர் - கொழும்பு), காலஞ்சென்ற பவானி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலாதரன் (J.P), லோகாதரன், காலஞ்சென்ற திவாகரன் மற்றும் தயாபரன், காலஞ்சென்ற விமலாதேவி (கனடா) மற்றும் குகனேஸ்வரி (பல் வைத்தியர்-கொழும்பு), கருணாகரன் ஆகியோரின் மைத்துனரும், சருண்ஜா-சிவலக்சன் (மாணவி-லங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரி), அருண்ஜா (வருமானப் பரிசோதகர்-வலி தெற்கு பிரதேச சபை), கருண்ஜா (மாணவி, தரம்-12), லருண்ஜா (மாணவி, தரம்-08 யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), யதுசாந்தன் (மாணவன், தரம்-10, யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), லினோயன் (கனடா), டினுசன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுன்னாகம் டாக்டர் சுப்பிரமணியம் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் கடந்த (27.05.2021) வியாழக்கிழமை நடைபெற்று, தகனக்கிரியை சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயாத்தில் பிற்பகல் 04.00 மணிக்கு நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**சாந்தன் - 077 967 1330 - மருமகன்**
**கலாதரன் - 071 856 1625 } மைத்துனர்கள்**
**தயாபரன் - 077 691 5296 }**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடுப்பூசிக்....

நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் கொரோனாத் தடுப்பூசித்திட்டம் குறித்து நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர், அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: .

'சைனோஃபோர்ம் தடுப்பூசி ஒன்றின் விலை 15 டொலர் என்ற அடிப்படையில் 14 மில்லியன் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்ய அமைச்சரவையில் அனுமதி பெற்றுக்கொண்டுள்ள போதிலும் பங்களாதேஷ் குறித்த தடுப்பூசியை 10 டொலர்களுக்குப் பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இதன்படி குறித்த தடுப்பூசி கொள்வனவின்போது 70 மில்லியன் டொலர்கள் மோசடி இடம்பெற்றுள்ளது. நாட்டில் தடுப்பூசி வழங்கும் திட்டம் ஆரம்பம் முதலே ஒழுங்காக முன்னெடுக்கப்படவில்லை.

நாட்டில் 60 வீதமானவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட வேண்டுமானால் நாட்டுக்கு மொத்தமாக 30 மில்லியன் (3 கோடி) கொரோனாத் தடுப்பூசி டோஸ்கள் தேவைப்படும் நிலையில், அரசு கடந்த 5 மாதங்களில் 3 மில்லியன் (30 லட்சம்) தடுப்பூசிகளை மட்டுமே பெற்றுள்ளது.

இதன்படி நாட்டுக்கு மேலும் 27 மில்லியன் (இரண்டு கோடி 70 லட்சம்) தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு கிடைக்கும் குறைந்த தொகைத் தடுப்பூசிகளையும் அரசில் உள்ள சிலர் தமது பதவிப் பலத்தைப் பயன்படுத்தி தமக்குத் தேவையானவர்களுக்குப் பெற்றுக் கொடுத்துவரும் நிலையில் பொதுமக்களே தற்போது பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைக்கு அமைய நாட்டு மக்களிடையே 10 வீதமானவர்களுக்குத் தடுப்பூசி வழங்கப்படும்போது 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். எனினும், இலங்கையில் அந்தப் பரிந்துரை மீறப்பட்டுள்ளது.

இலங்கையில் இதற்கு முன்னர் தடுப்பூசி வழங்கும் திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், நாட்டு மக்கள் இன்று நாடு முழுவதும் தடுப்பூசி தேடிச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு ஜனவரியில் உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள தடுப்பூசி வழங்கும் கோட்பாட்டுகளை மீறி அரசு செயற்பட்டு வருகின்றது. மக்களின் உயிரை விசேடமானவர்கள் மற்றும் முக்கியமற்றவர்கள் எனத் தரம் பிரிக்க வேண்டாம்' - என்றுள்ளது. (ம-22)

## தடுப்பூசி....

எந்தவொரு அச்சமுமின்றி தடுப்பூசி ஏற்றிக்கொள்ள முன்வர வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சமுதாய மருத்துவ நிபுணர் இ.கேசவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கை நேற்று ஆரம்பமாகியது. இதனை நேரடியாகச் சென்று பார்வையிட்ட பின்னர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

**தடுப்பூசி யார் ஏற்றலாம்? யாரெல்லாம் ஏற்றக்கூடாது?**

நீரிழிவு, இருதய நோய் மற்றும் குருதி அமுக்கம் போன்ற தொற்றா நோய் உள்ளவர்கள் கட்டாயம் தடுப்பூசி ஏற்ற வேண்டும். இவர்கள் ஏனையோரை விட தடுப்பூசி ஏற்றுவது கட்டாயம். தொற்றா நோய் உள்ளவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டால் பாதிப்பு அதிகம். எனவே அவர்கள் தடுப்பூசி ஏற்றுவது சிறந்தது.

காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய் உள்ள நேரத்தில் இந்தத் தடுப்பூசியை ஏற்றக்கூடாது. அந்த நோய் நிலைமை மாறிய பின்னர் ஏற்றலாம். கொரோனாத் தொற்று உள்ள ஒருவர் இந்தத் தடுப்பூசியை ஏற்ற முடியாது. தொற்று மாறிய பின்னர், அதாவது 2 வாரங்கள் கழித்து அவர்கள் தடுப்பூசியைப் போட முடியும்.

கொரோனாத் தொற்றாளர் ஒருவருடன் தொடர்புடையோர் என தனிமைப்படுத்தப்பட்டுள்ள முதல்நிலை தொடர்பாளர்களும் இந்தத் தடுப்பூசியை ஏற்றமுடியாது. ஏனெனில் அவர்களுக்கு சில வேளைகளில் தொற்று இருக்கக்கூடும்.

மேலும் எதிர்ப்பு சக்தியைக் குறைப்பதற்கான மருந்துகளை எடுத்துக்கொள்பவர்கள் மருத்துவ ஆலோசனையைப் பெற்று ஏற்றுவது பொருத்தமானது. புற்றுநோய்க்கான மருந்துகளில் சில எதிர்ப்பு சக்தியைக் குறைக்கும். அவற்றை தொடர்ச்சியாக எடுத்துக் கொண்டிருப்பவர்களும் இவ்வாறான மருத்துவ ஆலோசனை பெறவேண்டும். அவ்வாறான மருந்துகள் எடுக்காத புற்றுநோயாளர்கள் தடுப்பூசியை ஏற்ற முடியும்.

குருதி உறைதல் சம்பந்தமான பிரச்சினை உள்ளவர்கள் மற்றும் முன் எப்போதாவது தடுப்பூசி ஏற்றும்போது கடும் ஒவ்வாமை ஏற்பட்டவர்கள் மருத்துவ ஆலோசனையைப் பெற்று தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள வேண்டும்.

எச்.ஐ.வி. தொற்றுள்ளவர்கள் அது கட்டுப்பாட்டில் இருக்கும்போது இந்தத் தடுப்பூசியை ஏற்ற முடியும்.

**பாலூட்டும் தாய்மாருக்கு கட்டுப்பாடில்லை**

மேலும், பாலூட்டும் தாய்மார் தடுப்பூசியை ஏற்றமுடியும். குழந்தை பிறந்து எத்தனை மாதங்கள் என்ற கட்டுப்பாடுகள் எவையும் இல்லை. அத்துடன் தடுப்பூசி ஏற்றிய பின்னர் பாலூட்டுவதை நிறுத்தத் தேவையில்லை.

இதேவேளை, கர்ப்பிணித் தாய்மாருக்கு சைனோஃபோர்ம் தடுப்பூசி பாதுகாப்பானது என்று இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. அவர்கள் இதனை ஏற்றுவதை தவிர்ப்பது நல்லது. அதேபோன்று கர்ப்பம் தரிப்பதற்கு எதிர்பார்ப்பவர்களும் இந்தத் தடுப்பூசியை ஏற்றக்கூடாது.

**இரண்டு டோஸ் கட்டாயம்**

சைனோஃபோர்ம் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களும் ஏற்றப்படவேண்டும். முதலாவது டோஸ் ஏற்றப்பட்டு 4 வார இடைவெளியின் பின்னர் இரண்டாவது டோஸ் ஏற்றப்படவேண்டும்.

சைனோஃபோர்ம் தடுப்பூசி ஏற்றிய பின்னர் தலையிடி, காய்ச்சல் மற்றும் உடம்பு நோ ஆகியவை ஏற்படலாம். இது சாதாரணமானது. இந்தத் தடுப்பூசி உடலில் சென்று செயற்படத் தொடங்கும்போது இவ்வாறான நிலைமை ஏற்படலாம். இவ்வாறான பக்கவிளைவு தென்படவில்லை என்றால் தடுப்பூசி செயற்படவில்லை என்று அர்த்தம் கொள்ளக்கூடாது.

தடுப்பூசி ஏற்றிய பின்னரும் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணுதல் மற்றும் கைகளை அடிக்கடி கழுவுதல் போன்ற செயற்பாடுகளைத் தொடரவேண்டும். ஏனெனில் தடுப்பூசி ஏற்றியவருக்கு கொரோனாத் தொற்றால் பாதிப்பு ஏற்படாதபோதும் அவர் கொரோனாக் காவியாக இருக்கலாம். அவர் ஊடாக தடுப்பூசி ஏற்றாத ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**வினைத்திறனானது**

18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே சைனோஃபோர்ம் தடுப்பூசி ஏற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் நாம் இங்கு 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே அதனை ஏற்றுக்கின்றோம். சைனோஃபோர்ம் தடுப்பூசி தென்னிலங்கையில் இதுவரை லட்சக்கணக்கானோருக்கு ஏற்றப்பட்டுள்ளது. தடுப்பூசி ஏற்றியதால் எந்தப் பாதிப்பும் வந்ததாக இதுவரை பதிவாகவில்லை. இந்தத் தடுப்பூசி 80 சதவீதம் வினைத்திறன் வாய்ந்தது.

அதன் அர்த்தம் தடுப்பூசி ஏற்றிய 100 பேரில் 80 பேருக்குத் தொற்று வராது. 20 பேருக்குத் தொற்று வரலாம். ஆனால் அவர்களுக்கு பாரதூரமான விளைவாக அது இருக்காது. உலக சுகாதார நிறுவனம் அங்கீகரித்த அனைத்துத் தடுப்பூசிகளும் வினைத்திறனானதும் பாதுகாப்பானதும்தான். திரிபடைந்த வைரஸிலிருந்தும் பாதுகாப்பு கொடுக்கும். தடுப்பூசி ஏற்றியவர்களுக்கு திரிபடைந்த வைரஸ் தொற்றாது. அல்லது தொற்றினாலும் பாரதூர மான பாதிப்பு ஏற்படாது- என்றார். (ம-ஒ,5)

## அஸ்ராஜெனகா....

களுக்கு ஏற்றுவது தொடர்பில் ஆய்வு செய்வதற்கு தொழில்நுட்பக் குழுவை சுகாதார அமைச்சு நியமிக்கவுள்ளது.

'இரண்டு வெவ்வேறு தடுப்பூசிகளையும் ஏற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆய்வுசெய்ய தொழில்நுட்பக் குழுவை நியமிப்பதற்கு சுகாதார அமைச்சுக்கு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது' என்று மருத்துவ நிபுணர் சங்கத் தலைவர் மருத்துவர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அஸ்ராஜெனகா மற்றும் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளை கலந்து ஏற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆராய்வதற்கு தொழில்நுட்பக் குழுவை நியமிக்குமாறு தொற்றுநோய்களுக்கான ஆலோசனைக் குழு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவுறுத்தியுள்ளது.

'எமது கலங்களுக்குத் தேவையான புரதங்களை எடுத்துச்செல்வதற்கு அடினோ வைரஸ் எனப்படும் வேறுபட்ட வைரஸின் மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தை அஸ்ராஜெனகா மற்றும் ஸ்புட்னிக் வி ஆகிய தடுப்பூசிகள் பயன்படுத்துகின்றன' என்று பெர்னாண்டோ சுட்டிக்காட்டினார்.

மேலும் ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது மற்றும் இரண்டாவது டோஸ்களின் அளவுகள் வேறுபட்டவை. இரண்டு வேறுபட்ட அளவுகள் கலக்கக் கூடிய வடிவமாக அது இருக்கின்றது. எனவே ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸை, அஸ்ராஜெனகா தடுப்பூசி ஏற்றியவர்களுக்கு இரண்டாவது டோஸாகக் கொடுப்பது கோட்பாட்டளவில் சாத்தியமானது. சீனாவின் சைனோஃபோர்ம் தடுப்பூசியானது கொரோனா வைரஸின் செயலற்ற வடிவத்தைக் கொண்டுள்ள தடுப்பூசி என்பதலால் அதை வேறு தடுப்பூசிகளுடன் பயன்படுத்த முடியாது, என்றார் மருத்துவர் பெர்னாண்டோ. (ஒ.5,இ)

## கிளிநொச்சியில்....

அவர்களில் ஒருவர் பெண்.

சட்டவிரோத மண் அகழ்வு தொடர்பான பிரச்சினையே வாள்வெட்டில் முடிந்தது என்று முதல்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-12)

## மூதாட்டி....

சம்பவத்தில் இரண்டு ஆண்டுகளாக தலைமறைவாகியிருந்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பகுதியில் வைத்து அவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

25 வயதுடைய அவர், இரண்டு ஆண்டுகளாக புங்குடுதீவில் தலைமறைவாகியிருந்தார். மானிப்பாய்க்கு வருகை தந்திருந்த நிலையில் காங்கேசன்துறை பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி சி.நிதர்சன் தலைமையிலான அணியினர் அவரைக் கைதுசெய்தனர். தெல்லிப்பழை மகாதனையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கமலாதேவி (வயது 70) என்ற மூதாட்டி கழுத்து நெரித்துக் கொலைசெய்யப்பட்ட நிலையில் 2019ஆம் ஆண்டு மே 6ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார்.

மூதாட்டி அணிந்திருந்த நகை மற்றும் வீட்டிலிருந்த பணம் என்பவை கொள்ளையிடப்பட்டுள்ளன என்று உறவினர்கள் தெரிவித்திருந்தனர்.

சம்பவத்தையடுத்து 5 பேர் கைதுசெய்யப்பட்டனர். 6ஆவது சந்தேகநபர் தலைமறைவாகியிருந்தார். இந்த நிலையில் 6ஆவது சந்தேகநபர் 2 ஆண்டுகளின் பின் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

'மூதாட்டி கொலைசெய்யப்பட்ட போது நான் அவரது காலைப் பிடித்து வைத்திருந்தேன். என்னை இரண்டு ஆண்டுகள் தலைமறைவாகியிருக்குமாறு மற்றவர்கள் கூறினர். பொலிஸார் மறந்த பின்னர் வீட்டுக்கு வருமாறும் தெரிவித்திருந்தனர்' என்று சந்தேகநபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று தெரியவருகின்றது. (ம-26)

## தமிழருக்கு...

லில் பத்தேகம சமித தேரர், சுதந்திரக் கட்சி சார்பாக காலி மாவட்டத்தில் போட்டியிட்டு 42 ஆயிரத்து 120 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இதன்மூலம் இலங்கை வரலாற்றில் முதலாவதாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகிய பௌத்த தேரர் என்ற பெருமையை பத்தேகம சமித தேரர் பெற்றிருந்தார்.

'தமிழர்களை இந்நாட்டில் சிறுபான்மை இனம் என்று சொல்லக்கூடாது. எல்லோரும் இந்நாட்டின் மக்கள். எதை வைத்துப் பெரும்பான்மை, சிறுபான்மை என்று வரையறுக்கப்படுகின்றது? அப்படிச் சொல்லும்போதே நாங்கள் இன்னும் தமிழ் பேசும் மக்களைச் சிறுமைப்படுத்துகின்றோம்' என்று அவர் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். இறுதிவரை அவர் இந்த அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவில்லை. (ம-22)

## யாழ்.நூலகம்....

பாணம் பொதுநூலகம் எரியூட்டப்பட்டு. உலகில் பெறுமதி வாய்ந்த புத்தகங்கள், ஓலைச்சுவடிகள் என்று அரும் பெரும் பொக்கிசமாக விளங்கிய யாழ்ப்பாணம் பொதுநூலகம் எரிக்கப்பட்ட போது பல கோடி ரூபா பெறுமதியான ஏராளமான நூல்கள் எரிந்தழிந்தன.

நூலகம் எரிவதை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இருந்தவாறு அறிந்துகொண்ட தாவீது அடிகள் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 14 கோரிக்கைகளை முன்வைத்து

# சுகாதாரத் தொழிற்சங்க ஒன்றியம் அரசுக்கு எதிராக போராடத் திட்டம்

கொழும்பு, மே 31
'இலங்கை சுகாதார தொழிற் சங்க ஒன்றியம் அரசிடம் 14 கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. இந்தக் கோரிக்கைகள் நாளை முதலாம் திகதிக்கு முன்னர் தீர்க்கப்படாவிட்டால் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. இலங்கை சுகாதார தொழிற்சங்க ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த குருகே இது தொடர்பில் தெரிவிக்கையில்:

'கொரோனாத் தொற்றுநோய் தொடர்பான முடிவெடுத்தலில் ஒருங்கிணைந்த தொழிற் சங்க குழுவையும் இணைத்தல் வேண்டும், வைத்தியசாலைப் பணிக்குழவினருக்கு தடையின்றி போதியளவு சுய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்க வேண்டும், வைத்தியசாலைகளிலுள்ள கொரோனாக் கட்டுப்பாட்டுக்குழுவில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் இணைத்துக்கொள்ள வேண்டும், பொது நிர்வாக அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்துக்கமைய கர்ப்பிணி சுகாதாரத்துறை சார் பணிக்குழுவினருக்கு விசேட விடுமுறைக்கான சுற்றுநிருபம் வெளியிடப்பட வேண்டும், பொது நிர்வாக அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்துக்கமைய சுகாதாரத்துறைசார் பணிக்குழுவினருக்கு விஷேட விடுமுறை வழங்கப்பட வேண்டும், அரசு அறிவித்த விசேட விடுமுறை தினத்தில் பணியாற்றிய சுகாதாரப் பணிக்குழுவினருக்கு விடுமுறை தினப்படி வழங்க வேண்டும், பயணத்தடை காலத்தில் சுகாதாரத்துறைசார் பணிக்குழுவினருக்கு இலவச போக்குவரத்து வசதியேற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும், கொரோனாத் தொற்று காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட அல்லது சிகிச்சை பெறும் சுகாதாரப் பணிக்குழுவினருக்கு ஒரு முறையான முறைமையை செயற்படுத்தல் வேண்டும், விசேட சிரமங்கள் காணப்படும் பணிக்குழுவினருக்கு அண்மையிலுள்ள வைத்திய சாலைகளில் தற்காலிகமாக கடமையாற்ற அனுமதித்தல் வேண்டும், அனைத்துப் பணிக் குழு வெற்றிடங்களையும் நிரப்புதல் வேண்டும், பணிக்குழுவினரின் மேலதிக நேரக்கொடுப்பனவு, விடுமுறை தினக் கொடுப்பனவுகளில் காணப்படும் கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும், கொரோனா சிகிச்சை நிலையங்கள், இடைநிலை சிகிச்சை நிலையங்களில் சேவையாற்றும் பணிக்குழுவினருக்கு உணவு, போக்குவரத்து வசதி மற்றும் அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும், ஆபத்தான மற்றும் கடுமையான சேவைகளை வழங்குவதற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும், கொரோனாத் தடுப்பூசி ஏற்றாத பணிக்குழுவினருக்கு உடனடியாக ஏற்றுதல் வேண்டும் ஆகிய கோரிக்கைகள் எம்மால் முன்வைக்கப்பட் டுள்ளன.

இவை எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன் தீர்க்கப்படா விட்டால் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்படும்'- என்றார். (ம-22)

# 48 வீதமானோர் புகைத்தலை கைவிட்டனர்

### போதைப்பொருள் தகவல் மத்திய நிலையம் தெரிவிப்பு

கொழும்பு, மே 31
கொரோனாத் தொற்று பரவலையடுத்து, இலங்கையில் 48 சதவீதமானவர்கள் புகைத்தலை கைவிட்டுள்ளனர் என்று போதைப் பொருள் தகவல் மத்திய நிலையம் தெரிவித்தள்ளது.

நாடு முடக்கப்பட்டுள்ளதால், புகைப்பொருள்களைப் பெற முடியாத நிலைமையால், புகைத்தல் கைவிடப்பட்டுள்ளது. இதேவேளை, இது சிறந்த முன்னேற்றகரமான செயற்பாடு என்று தெரிவித்துள்ள குறித்த மத்திய நிலையமானது, புகைப்பிடிப்பதால் இலங்கையில் நாளாந்தம் 40 பேர் வரை உயிரிழக்கும் நிலையில், புகைப்பிடித்தலை கைவிடுவதால் உயிர்களைப் பாதுகாக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது. (த-இ)

# மேலும் 2,849 பேருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, மே 31
நாட்டில் நேற்று 2 ஆயிரத்து 849 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 83 ஆயிரத்து 442ஆக உயர்வடைந்துள்ளது. கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 825ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

# தீப்பிடித்த கப்பலால் 95 சதவீதம் கடலழிவு



கொழும்பு,மே 31
கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் தீப்பிடித்த எக்ஸ்பிரஸ் கப்பலால் 95 வீத கடலழிவு, கண்களுக்குத் தெரியாமல் இடம்பெற்றுள்ளது என்று பேர்ள் புரொடெக்டர்ஸ் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முதிதா கட்டுவால தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
கப்பலில் அடங்கியிருந்த இரசாயனங்கள் கடலில் கலந்துள்ளமையால், அழிவின் 95 வீதம் கடலிலேயே காணப்படுகின்றது. கண்களால் நாம் பார்க்கும் அழிவு 5 வீதம் மாத்திரமே என்று கருதலாம்.

குறித்த இரசாயனங்களை அகற்ற நீண்டகாலம் எடுக்கும் என்பதால், அழிவின் அளவும் பெரிதாக இருக்கும். தீப்பிடித்து எரிந்த கப்பலில் கொள்கலன்கள், பிளாஸ்டிக் பைகள், தண்ணீர்ப் போத்தல்கள், பைகள் உள்ளிட்ட அடர்த்தியான பல வகையான பிளாஸ்டிக் பொருள்கள் கரை ஒதுங்கியுள்ளன. சிங்கப்பூர் கொடியின் கீழ் பயணம் செய்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் எதனோல், 25 தொன் நைட்ரிக் அமிலம், இரசாயனப் பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள் அடங்கிய ஆயிரத்து 486 கொள்கலன்கள் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனால் தண்ணீரில் கலந்த பிளாஸ்டிக் துகள்கள் கடுமையான சுற்றுச்சூழல் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

எவ்வாறெனினும், எண்ணெய் கசிவால் ஏற்படும் சேதத்தைக் குறைக்க இலங்கையில் எந்த வழிமுறையும் இல்லை.

எண்ணெய் கசிவு ஏற்பட்டால், எரிபொருள் கடல் நீரின் மேற்பரப்பில் பரவும். இதனால் சூரிய ஒளி கடலுக்குள் நுழைவது தடுக்கப்படும். இது கடல் வாழ் உயிரினங்களையும் சுற்றுச் சூழல் அமைப்பையும் மோசமாகப் பாதிக்கும். இந்தப் பாதிப்பு, கொழும்பு துறைமுகம், துறைமுக நகரம் மற்றும் நீர்கொழும்பு மீன்பிடி துறைமுகம் ஆகியவற்றுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் நாட்டின் பொருளாதாரத்தில் கடுமையான இழப்பு ஏற்படக்கூடும். கடல் நீரால் அடித்து வரப்பட்டுள்ள பிளாஸ்டிக் துகள்களால் மீன் மற்றும் பிற கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்பட்ட சேதம் மிகப்பெரியது. கடலில் உள்ள இரசாயனங்கள் பிளாஸ்டிக் துகள்கள் உறிஞ்சப்படும். மேலும் இதுபோன்ற தீங்கு விளைவிக்கும் இரசாயனங்களை உறிஞ்சும் துகள்கள் கடற்கரையில் மாத்திரமன்றி கடலிலும் காணப்படுகின்றன. இதுபோன்ற துகள்களை மீன்கள் சாப்பிடுவது அவற்றின் ஆரோக்கியத்துக்கு தீங்கு விளைவிக்கும். இதனால் மீன்பிடித் தொழிலுக்கு நெருக்கடி ஏற்படும். சிறிய பிளாஸ்டிக் துண்டுகளைப் போலவே, இவை உணவுச் சங்கிலியில் நுழைந்து மக்களுக்கு உணவுத் தட்டுப்பாட்டையும் ஏற்படுத்தும். தன்னார்வ அமைப்புகள் ஒன்றிணைந்து கடற்கரையைச் சுத்தம் செய்வதற்கான வாய்ப்பு நாட்டில் நடைமுறையிலுள்ள பயணக் கட்டுப்பாடுகளால் தடையாக அமைந்துள்ளது- என்றார். (எ-4)

# துறைமுக நகரத்துக்குள் பல நாடுகளுக்கு வாய்ப்பு

### அரச தரப்பு தெரிவிப்பு

கொழும்பு,மே 31
கொழும்பு துறைமுக நகரத் திட்டத்துக்குள், பல நாடுகளின் முதலீட்டாளர்களும் இணைவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று அரச தரப்பு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தில் சீனாவுடன் உறவு இருப்பதால் ஏனைய நாடுகளின் முதலீட்டாளர்களும் இங்கு வரமாட்டார்களா? என்று அமைச்சர்களான ஜீ.எல் பீரிஸ் மற்றும் அஜித் நிவார்ட் கப்ராலிடம் கேள்வி எழுப்பப்பட்டன. அதற்குப் பதிலளித்துள்ள அவர்கள்,

ஏற்கனவே பல நாடுகளின் சிறப்பு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருகை தந்து, இந்த துறைமுகத் திட்டத்தைக் கவனித்துள்ளனர். அவர்கள் இந்தத் திட்டத்தில் ஆர்வமாகவும் உள்ளனர். குறிப்பாக, துறைமுக நகரத்தில் கட்டப்படவுள்ள பள்ளியின் பெயர் ஐரோப்பிய நாட்டின் பெயராகவும் இருக்கலாம். இங்கு கட்டப்படவுள்ள மருத்துவமனையின் பெயர் இலங்கையில் பலரை ஆச்சரியப்படுத்தும் வகையில் இருக்கப் போகின்றது. அந்த வகையில் இது ஐரோப்பிய மக்களிடையே மிக நெருக்கமான பெயராகவும் இருக்கலாம். - என்றனர். (எ-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.